தன்னை அறியும் மனம்

சுவாமி பிரபஞ்சநாதன்

ஸ்ரீ குருப்யோ நம:

தன்னை அறியும் மனம்

சுவாமி பிரபஞ்சநாதன்

ஸ்ரீ குருப்யோ நம:

முகவுரை

ஒரு தொடக்கம் என்று இருந்தால், அதன் முடிவு நிச்சயம் இருந்தாக வேண்டும். இந்த தொடக்கத்திற்கும், முடிவுக்கும் இடையில் உள்ள இடை 'வெளியை' **"காலம்"** என்று அழைத்துக் கொண்டு, அதன் தோற்றம் - மறைவு குறிப்பிடப்படுகின்றது.

இது படைக்கப்பட்ட பொருள்கள் எதுவாக இருப்பினும், அவைகள் அத்தனைக்கும் இந்த காலம் பொருந்தும். அதனால், படைத்தல் என்றால், அதற்கு முடிவாக அழித்தல் என்ற ஒன்றும் நிச்சயம் இருக்கும்.

இதில், ஜடப் பொருள்களாகட்டும், உயிர் பொருள்களாகட்டும் அனைத்திற்கும் ஆதாரமான மூலப்பொருள் என்ற **'பரம்பொருள்'** ஒன்று இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

அதனால்தான், படைக்கப்பட்ட அனைத்துப் பொருள்களும் மீண்டும் மூலத்தை (பரம்பொருளை) நோக்கி நகர்கின்றது. இந்த நகர்கின்ற காலம் பொருள்களைப் பொருத்து மாறுபடுகின்றது.

இந்த கால வேற்றுமைகளுக்குக் காரணம், அவைகள் கடந்து வந்த பாதைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் என்ற இருமைகள் எனலாம்.

எது ஒன்று, இதுபோன்ற இருமைகளில் சிக்கிக் கொள்கின்றதோ, அது, அந்த மூலத்தை அடைவதற்கு இங்கும், அங்கும் அலைந்து காலதாமதம் ஆகின்றது.

இங்கு காலம் என்பது இரண்டு நிகழ்வுகளுக்கு இடையில் உள்ள **'இடைவெளி'** என்பதினால், அந்த **'வெளி'** ஒன்றே அனைத்தையும் தீர்மானிக்கின்றது.

இங்கு **'வெளி'** என்று குறிப்பிடுவது, இந்த பிரபஞ்சத்தையே வெளிப்படுத்துகின்ற **"வெட்டவெளி"** (ஆகாசம்) பற்றி கூறப்படுகின்றது.

இத்தகைய வெட்டவெளியில் மிதக்குகின்ற பிரபஞ்சத்திற்குள் காணப்படுகின்ற கோடானு, கோடி சூரியன்களும், விண்மீண்களும், அந்த சூரியன்களை சுற்றுகின்ற கோள்களும், அந்த கோள்களில் வசிக்கின்ற கோடானு, கோடி சீவர்களும் என அத்தனைக்கும் ஆதாரமாக, அதனுள்ளே **'உள் வெளியாக'** ஊடுறுவி இருக்கின்றது.

ஆம், அதுவே, பரவெளி, பரம்பொருள், பரமாத்மா, பரமேஸ்வரன், பராசக்தி, பரிபூரணம் என பலவாறாக அழைக்கப்படுகின்றது.

அந்த வெட்டவெளி என்ற வெள்ளைத் திரையினிலே, **'பிரபஞ்சம்'** என்ற வர்ணப்படம் திரையிடப்பட்டு, தினசரி மூன்று காட்சிகளாக கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என திரைப்படம் அரங்கு நிறைந்து அனுதினமும் ஓடிக்கொண்டிருக்கின்றது.

திரைப்படத்தின் கதாநாயகனாக **‘பரமாத்மா’** மிகச்சிறப்பாக படத்தில் நடிக்கின்றார். அவரது நடிப்பை பார்க்க விரும்பிய அவரது ரசிகர்களான, அனேக சீவர்களும், அவரவர்களின் தகுதிக்கு ஏற்ப நுழைவுச் சீட்டு வாங்கிக் கொண்டு, உலகம் என்ற அரங்கினுள் அமர்ந்து, உல்லாசமாக படம் பார்த்துக் கொண்டு உள்ளனர்.

படம் பார்த்து முடிக்கின்றவரை, அந்த படத்தில் வருகின்ற காட்சிகளாகவே இந்த சீவர்கள் மாறி விடுவதினால், அதில் வருகின்ற இன்ப, துன்பங்களுக்கு ஆட்பட்டு, அதன் அனுபவங்களுக்கு ஆட்படுகின்றனர்.

அந்த காட்சிகளுக்கு வேறாக, உண்மையான **‘நான்’** என்ற **’இன்னார்’** அந்த திரையரங்கத்தின் உள்ளே இருந்து படம் பார்ப்பதை மறந்துவிட்டு, அந்த திரைப்படத்துடன், திரைப்படமாக ஒன்றாகி விடுகின்றன.

அதாவது, “காண்பான், காட்சி, காணப்படும் பொருள்” என **‘திரிபுடி’** (மூன்றும்) இல்லாமல் ஒன்றாகி விடுகின்றன.

படத்தைப் பார்ப்பவன், படத்தின் காட்சிகள், படத்தில் உள்ள அனைத்தும் என இந்த மூன்று வித பேதமைகளும் இன்றி ஒன்றாக மாறி விடுவதைப் போன்று, இந்த உலகத்தை உண்மை என்று கருதி, அதனுடன் ஒன்றாகி சிக்கிக்கொள்கின்றோம்.

உண்மையில் இந்த மூன்றும் ஒன்றாகி விடுவது என்பது சத்திய வஸ்துவான பரமாத்மாவில் மட்டுமே நிகழ வேண்டும்.

அதைவிடுத்து, பொய்யான இந்த உலகத்தை உண்மை என்று கருதி, அதனை பிடித்துக்கொண்டு, அதிலிருந்து விடுபட முடியாமல், அதனால் உண்டாகின்ற இன்ப, துன்பங்களுக்கு ஆட்பட்டு இருக்கின்ற வரை, நம்முடைய அறியாமை நீங்காது.

இதற்குக் காரணம், மனம் கற்பித்துக் கொண்ட கற்பனைகளுக்கு ஏற்ப, இந்த உலகம் ஒவ்வொரு விதமாக ஒவ்வொருவருக்கும் உண்மை போன்று, காட்சியாகின்றது.

திரைப்படம் முடிந்ததுமே, நாம் அதிலிருந்து பிரிந்து, வெளியே வந்து, அது பொய் என அறிந்து கொள்வதைப்போன்று, இந்த பொய்யான உலகத்தில் ஒன்றாகிப் போன நம் மனம், அதிலிருந்து விடுபட்டு, நம் உண்மை சொரூபத்தை அறிந்து கொண்டால் மட்டுமே, இந்த படம் பார்த்ததின் (உடல் எடுத்ததின்) பலன் நமக்கு முழுமையாக உண்டாகும்.

அந்த **'பலன்'** என்னவெனில், திருப்தி, ஆனந்தம், அமைதி, மௌனம் என பலவாறாக பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது.

அந்த பேரானந்தம் மட்டுமே பலனாக மனதில் நிலைத்திருக்க வேண்டுமெனில், மனதின் அறியாமை அகற்றப்பட வேண்டும். அதற்கு மனதை விசாரித்து, அதன் உண்மைத் தன்மையை உணர வேண்டும் என்ற

உன்னதமான நோக்கத்தோடு, இந்த நூலை ஏகாந்த பரவெளிக்கு எளிமையுடன் சமர்பிக்கின்றேன்.

நன்றி!

என்றும் அன்புடன்,

சுவாமி பிரபஞ்சநாதன்.

ஸ்ரீ குருப்யோ நமஹ

தன்னை அறியும் மனம்

குழந்தைப் பிறந்து விட்டது. பிறந்த குழந்தையின் வீட்டில் பெரியவர்களுக்கும், பெற்றவர்களுக்கும் பெரும் மகிழ்ச்சி உண்டானது. இவர்களது மனம் மகிழ்ச்சியில் நிலைகொள்ளாமல் இங்கும், அங்கும் அலைகின்றது, ஆனந்தப்படுகின்றது.

தனக்கு ஒரு வாரிசு வந்துவிட்டதை உடனடியாக தன் நண்பனுக்கு தெரிவிக்கவேண்டும் என்று தந்தையும், தன்னை மலடி என்று இந்த மக்கள் மனம் போனபடி பேச முடியாது என்று தாயும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இவர்களைச் சார்ந்த உற்றார் உறவினர்களுக்கு குழந்தைப்பிறந்த தகவல் கொண்டு சேர்க்கப்பட்டது. உறவுகளும் கூட்டம் கூட்டமாக வந்து குழந்தையைப் பார்த்து விட்டுச் சென்றனர்.

சிலர் குழந்தை அவன் தாத்தாவைப் போன்றே இருக்கின்றான் என்றும், இன்னும் சிலர் இல்லை அவன் அம்மாவைப் போன்றே இருக்கின்றான் என்றும், இன்னும் சிலர் இல்லை, இல்லை அவனது அப்பா சிறு குழந்தையாக இருந்தபொழுது எப்படி இருந்தானோ, அப்படியே இருக்கின்றான் என்றும் அவரவர்களுக்கு மனதில் தோன்றியதை மகிழ்ச்சியுடன் கூறி விட்டுச் சென்றனர்.

பக்கத்து வீட்டுக்காரர்களும் தங்கள் பங்கிற்கு பல கருத்துக்களைக் கூறி குழந்தை இல்லை என்ற அந்த தம்பதிகளின் குறை நீங்கி விட்டதாக கூறிவிட்டுச் சென்றனர். பெற்றவர்களின் மனமோ பெரும் மகிழ்ச்சியில் திளைத்தது. மனதிலோ பல எண்ணங்கள் அலைபாய்ந்தது. தன் குழந்தைக்கு அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று பல்வேறு எண்ணங்களினால் மகிழ்ச்சியில் பரிதவித்தது.

பிறந்த குழந்தையோ இதை எதையும் அறியாமல் எண்ணங்கள் அற்ற நிலையில் ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருந்தது. அதற்கு உண்மையில் நான் யார்? என்றுக்கூட அறிய முடியாத அற்பமான நிலை. தன்னை ஈன்றெடுத்த தன் தாய் தந்தையை நம்பி மட்டுமே இருக்க வேண்டிய கட்டாய நிலை. கற்பனையில் கூட கண்டறிய முடியாத கவலையற்ற நிலை.

கற்பிதங்கள் ஏதும் அற்ற, வெளி உலக விசயங்கள் ஏதும் திணிக்கப்படாத நிலையில் தன் உணர்வில், தன் இருப்பில், தனித்துவம் கொண்டதான எண்ணங்கள் அற்ற தற்பர நிலை என்று நம்முடைய மனம் தவறாக நினைத்துக் கொள்கின்றது.

இந்த தற்பர நிலையில் அந்த குழந்தைக்கு தன்னையும், தன் உண்மை சொரூபத்தையும் (பராபரத்தை) அறிய முடிவதில்லை. அங்கு எண்ணங்கள் அற்ற நிலையில் அதற்கு ஆனந்தமும் இல்லை.

இதிலிருந்து மனம் அற்ற நிலையில் ஆனந்தம் உண்டாகி, அந்த ஆனந்தம் நிலைப்பெற முடியுமானால், ஆழ்ந்த உறக்கத்தில் உண்டான ஆனந்தம் நிலைத்து நிற்க வேண்டும்.

அதுவும் சாத்தியம் இல்லை.

இந்த மனமோ, அற்ப பொருள்களினாலும், அன்பானவர்களின் அரவணைப்பினாலும் மட்டுமே ஆனந்தத்தை அடைய விரும்புகின்றது.

அந்த ஆனந்தமும் தனக்கு விருப்பமான பொருட்களை தான் அனுபவிக்கும் பொழுதும், அன்பானவர்களின் அரவணைப்பில் இருக்கும் பொழுதும் மட்டுமே தற்காலிகமான ஆனந்தமாகவே காணப்படுகின்றது.

எந்த ஒரு அனுபவமும் (ஆனந்தம் அல்லது துக்கம்) இந்த புவியில் பிறந்த உடலுக்கு உண்டாக வேண்டுமானால், அதற்கு மனம் என்ற கரணம் மிகவும் அவசியம் ஆகின்றது. அவ்வாறு அடைந்த அனுபவங்களினால் இன்பமோ, அது, துன்பமோ, அதை மனம் மட்டுமே அறிந்துக்கொள்ள முடிகின்றது.

எவ்வாறு ஆழ்ந்த உறக்கத்தில் உண்டான ஆனந்தத்தை உறக்கம் கலைந்தபின்பு, விழிப்பு நிலையில் சுகமாக உறங்கினேன் என்று மனம் மட்டுமே அறிகின்றதோ, அதுபோன்று, நிலையான மகிழ்ச்சியை அறிவதும் மனமாகவே இருக்க வேண்டும்.

அப்படியானால், மனம் அற்ற நிலையில், இறை நிலையின் இருப்பு நிலையான, இயல்பான ஆனந்த நிலை என்பது சாத்தியமா?

ஆகவே, ஆனந்தத்தை பெயர்களில் மட்டும் வைத்துக் கொண்டு தேக அபிமானத்தில் நிலைத்து இருப்பதைவிட, நிலையான ஆனந்தத்தை நிலைத்து இருக்கச் செய்வது எவ்வாறு?

பிறக்கின்ற ஜீவர்கள் அனைத்தும் தன் தேகத்தின்மீது அளவற்ற அபிமானம் வைக்கின்றது. அதனால்தான், மற்றவர்களைப் போன்று நான் அழகாக இல்லை, கருப்பாக இருக்கின்றேன், உயரமாக இல்லை, குட்டையாக இருக்கின்றேன் என்று ஏதாவது ஒரு குறையைக் கண்டு பிடித்து, மனம் திருப்தியற்ற நிலையில் எப்பொழுதும் இருக்கின்றது.

இதுமட்டுமின்றி, தன்னுடைய நடை, உடை மற்றும் பாவனை என்று தேகத்தின் மீது அலாதி பிரியம் வைத்துக்கொண்டு அபிமானிக்கின்றது. இத்துடன் தன்னைச் சார்ந்த உறவுகளின் தேகத்தின் மீதும் இந்த மனம் அளவு கடந்த அபிமானமும், பாசமும் கொள்கின்றது.

இது மனிதனுக்கு மட்டுமல்ல, மற்ற ஜீவர்களுக்கும் இதுபோன்றே விருப்பமும், வெறுப்பும் அவைகளிடம் தேக அபிமானத்தினால் உண்டாகின்றது.

இந்த தேக சம்பந்தமான வேறுபாடுகளுக்கும், அபிமானங்களான மனதின் சம்ஸ்காரங்களுக்கும், ஒருவனது பல்வேறு பிறவிகளின் வாயிலாக உண்டான செயல் விளைவுகளின் முன்வினைகளே காரணமாக அமைகின்றன.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். - திருக்குறள்.

பிறப்பு என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவாக இருப்பினும், அவைகளின் பிறப்பினால் உண்டாகும் சிறப்பு என்பது அந்தந்த ஜீவர்களின் செயல் வினைகளுக்கு ஏற்றவாறு வேறுபடுகின்றது என்கின்றார் வள்ளுவப்பெருமான்.

அதனால்தான் மிக உயர்ந்ததுமான, உன்னதமான மனிதப்பிறவியில் ஒரே கால, தேசத்தில் (Time & Space) பிறக்கின்ற பல்வேறு குழந்தைகளிடையே

உடலாலும், மனதினாலும் மிகப்பெரிய வித்தியாசங்களை நம்மால் நேரிடையாகக் காணமுடிகின்றது.

இதனால்தான், சில குழந்தைகள் மிகவும் வசதியான செல்வந்தர்களுக்கும், சில குழந்தைகள் மிகவும் வசதியற்ற நிலையில் வறுமையில் வாடுகின்றவர்களுக்கும், சில உடல் ஊனமுற்ற நிலையிலும், சில மனவளர்ச்சி குன்றிய நிலையிலும், சில குழந்தைகள் புத்திசாலிகளாகவும் பிறக்கின்றதைப் பார்க்கின்றோம்.

இதில் பிறவி எடுக்கின்ற ஜீவர்களில், மிகவும் உயர் பிறப்பான மனிதப் பிறவிக்கு மட்டுமே மனம் என்ற அந்தக்கரணமானது சித்தம், புத்தி, அஹங்காரம் என்று பல பரிமாணங்களில் விரிவடைந்து, தன்னை அறியக்கூடிய **'ஆறாவது அறிவு'** என்ற தனித்துவம் வாய்ந்த புத்தி சக்தியைக் கொண்ட மனிதப் பிறவியாக அமைகின்றது.

அதனால்தான் மனிதப்பிறவியை மட்டுமே அனைத்து ஜீவர்களின் பிறப்பிலும், மிகவும் உயர்ந்தப் பிறவியாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறு மனம் என்ற அந்தக்கரணம் எண்ணங்களாக அறிந்துக்கொண்டவைகளை புத்தியாக (அறிவாக) சித்தத்தில் பதிந்து, அதனை அஹங்காரமாக **"நான்"** என்று வெளிப்படுத்துகின்றது.

இந்த அஹங்காரம் ஜீவனிடம் இருந்து வெளிப்படுவதினால் இதனை **“ஜீவ அஹங்காரம்”** என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

இந்த ஜீவன் சேகரித்துக்கொண்ட ஒட்டுமொத்த எண்ணங்களின் தொகுப்புகளை மனமாக சித்தத்தில் சேகரிக்கப்பட்டு, புத்தியாக புரிந்துக்கொள்கின்றது. இந்த புரிதலின் வித்தியாசத்தினால் மனிதன் ஒருவனுக்கு ஒருவன் மாறுபடுகின்றான்.

அந்த புரிதலில் **“எதை அறிந்துக் கொண்டால் வேறு எதையும் அறியத் தேவையில்லையோ, அதை அறிவதே அறிவு”** என்று சாஸ்திரம் மனிதனுக்கு மட்டுமே அறிவுறுத்துகின்றது.

மனிதனின் மனம் எதையாவது அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை இரண்டு வழிமுறைகளில் தூண்டுகின்றது.

அவைகளை,

1.பிரவிருத்தி மார்க்கம், 2.நிவிருத்தி மார்க்கம் என்று சாஸ்திரம் அழைக்கின்றது.

பிரவிருத்தி மார்க்கம் என்பது உலக விசயங்களில் மனதின் சிந்தனை எப்பொழுதும் இருப்பதையும், நிவிருத்தி மார்க்கம் என்பது ஈஸ்வர சிந்தனையில் மனம் எப்பொழுதும் இருப்பதையும் குறிப்பிடுகின்றது.

இந்த அரிதான இந்த மனிதப்பிறவி கிடைத்த சீவன் எந்த சிந்தனைகளும் இல்லாமல் சிவனே என்று சும்மா இருக்க முயன்றாலும், அதன் பூர்வ ஜென்ம வாசனைகளினால் உண்டான சம்ஸ்காரப் பதிவுகளால் மனம் உந்தப்பட்டு, தன் பிறவிச் சூழ்நிலைகளையும், அதற்கு காரணமான (தாய், தந்தை, உற்றார், உறவினர்) போன்ற மற்ற உறவுகளினாலும் இதன் வாழ்க்கை முறை வழி நடத்தப்படுகின்றது.

அதற்குக் காரணம் இந்த சீவனின் முன் வினைகளினால் சேர்க்கப்பட்ட கர்ம வினைகளே காரணம் ஆகின்றது.

அவ்வாறு கர்ம வசத்தால் உடல் எடுத்து வந்த இந்த சீவன் (குழந்தை), தன் பிறவிச்சூழ்நிலைக்கு ஏற்ப மொழி, மதம், இனம், கலாச்சாரம் என்று பலவற்றையும் பலவந்தமாக திணித்துக்கொண்டு, அதனை தனது புத்தியாக சித்தத்தில் சேகரித்துக்கொண்டு, அதற்கேற்ற வாழ்க்கை முறையை வாழ ஆரம்பித்து விடுகின்றது.

இறுதியில் அதனையே தன்னுடைய உண்மையான அறிவு என்று தவறாகத் தீர்மானித்துக் கொண்டு, அதில் சிக்கியும் கொள்கின்றது.

இனி, அந்த சீவனின் (குழந்தையின்) மனம் **‘தான் கண்டதே காட்சி, கொண்டதே கோலம்’** என்று பல புதிய அணுகுமுறைகளை உண்டாக்கிக் கொண்டு, தான் கற்றதே சரி என்று வாதிட்டு, அனைவரிடமும் சண்டையிட ஆரம்பித்து விடுகின்றது.

அதனால்தான் இன்று பலரும், தன்னுடைய இனம், மதம், மொழி, கடவுள் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும், தான் செய்கின்ற செயல்களே சரியானது என்றும், தனக்குத்தானே ஒரு வட்டத்தை அமைத்துக் கொண்டு, அதற்குள்ளேயே சுகம் இருப்பதாகக் கருதிக்கொண்டு, பல விசயங்களிலும் புரிதல் இல்லாமல் உடலாலும், மனதாலும் போராடுகின்றார்கள்.

இதுபோன்ற அற்ப சுகத்தையே உண்மையான சுகம் எனக்கருதி, தன் சுயத்தை இந்த மனிதன் அறிய மறுக்கின்றான்.

இது இன்றோ, அல்லது நேற்றோ உண்டானவைகள் அல்ல. தொன்றுதொட்டு காலம், காலமாக ஒவ்வொரு மனிதனின் நடைமுறை வாழ்க்கை முறைகளாக பயிற்றுவிக்கப்பட்டு, பாரம்பரியமாக மாறி, பரம்பரை, பரம்பரையாக இந்த தொடர் அனுபவம் அவனுக்கு கொடுக்கப்படுகின்றது.

இது மனிதனின் மனம் தனக்குத்தானே போட்டுக்கொண்ட பொன் விலங்கு (தங்கத்தால் ஆன பூட்டு) எனலாம்.

இந்த பொன் விலங்கினை கழற்றி வீசுகின்ற நிலைக்கு மனம் வெளியே வந்து, எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரவெளியை, **'வெளிக்கு வெளி கடந்து'** உள்ளே பார்க்க மறுக்கின்றது. அந்த வெட்டவெளியைப் போன்று சும்மா இருக்கும் சுகத்தை அறியவும் மறுக்கின்றது.

இதனையே வள்ளல் பெருமானாரும் கிழ்க்கண்ட பாடல் வரிகளில் மிக அழகாக எடுத்துரைக்கின்றார்.

“இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்று
என்று வருமோ அறியேன் என் கோவே - துன்று மல
வெம் மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து
சும்மா இருக்கும் சுகம்.”

நிலையான ஆனந்தத்தை அனுபவிக்கும் தன் சொரூப அனுபவமான இறை அனுபவம் இன்று வருமோ, நாளைக்கு வருமோ அல்லது என்றுதான் வருமோ தெரியவில்லை என்று வருந்துகின்றார்.

இவ்வாறு காலம் காலமாகத் தொன்று தொட்டு வருகின்ற மாயையை அறிந்து, அதிலிருந்து விடுபட்டு தன் சொரூபமாக இருக்கின்ற சிதாகாசப் பெருவெளியை (சித் என்ற அறிவை) வெளியே சென்று, வெட்ட வெளியில் தேடாமல், உள்ளே சென்று, இருதய குகைக்குள் கண்டு கொண்டு, சும்மா இருக்கின்ற சுகத்தை என்று அடையுமோ தெரியவில்லை என்று பாடுகின்றார்.

இதனையே வள்ளுவப் பெருமானாரும் கீழ்க்கண்ட குறட்பாவில் வலியுறுத்துகின்றார்.

“கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.” - திருக்குறள்.

தூய அறிவான, தூயவனான இறைவனின் திருவடியைத் தொழாமல், இவர்கள் கற்ற கல்வியினால்,

பெற்ற புத்தியினால் (மனதினால்) பயன் யாது? என்று இவர்களின் அறியாமையை நினைத்து மிகுந்த ஆதங்கம் கொள்கின்றார்.

மனிதனின் தேடுதலுக்கும், தேவைகளுக்கும் அவனது '**மனதின் நிறைவு இல்லாத தன்மையே**' காரணமாகின்றது. அதாவது, அவனுக்கு திருப்தியும், அமைதியும் இல்லாத காரணத்தினாலேயே அவன் எதையாவது தேடுவதையும், தேவையையும் வைத்துக் கொள்கின்றான்.

எப்பொழுது, அவனது மனம் திருப்தியை அடைகின்றதோ, அப்பொழுதே அமைதியையும், ஆனந்தத்தையும் அவன் அனுபவிக்கின்றான்.

'**அமைதி எங்கு வருகின்றதோ, அங்கு ஆனந்தம் தன்னால் வந்து விடுகின்றது**'.

உதாரணமாக, ஒருவனுக்கு பசி உணர்வு உண்டாகின்றது. உடனே மனம் உணவை நாடுகின்றது. உண்ண உணவு கிடைத்தவுடன், அவனது வயிற்றுப் பசியாறி அவனுக்கு போதும் என்ற மனம் வந்து விடுகின்றது. இதனால் மனம் திருப்தி அடைந்து அமைதியையும், ஆனந்தத்தையும் உணர்கின்றது.

இனி, அவன் முன்பு எத்தனை விதமான அறுசுவை உணவுகளை வைத்தாலும் அவனது மனம் அந்த உணவை தற்காலிகமாக நாடாது.

அதுபோன்றே, ஒருவனுக்கு காம உணர்வு உண்டாகின்றது. உடனே அவனது மனம் அந்த

ஆசையை பூர்த்தி செய்ய ஒரு பெண்ணை விரும்புகின்றது. அவனது இச்சை அந்த பெண்ணினால் நிறைவடைந்து விட்டால், அவனது மனம் மீண்டும் அந்த பெண்ணைத் தற்காலிகமாகத் தொட விரும்பாது.

இதுப்போன்று, மனமும், உடலும் தன் தேவைகளை ஒருங்கிணைந்து பூர்த்தி செய்து கொள்வதற்காக ஒன்றை ஒன்று சார்ந்து இருந்துக் கொண்டு அனைத்தையும் அனுபவிக்கின்றன.

ஆகவே, புலன்களின் வாயிலாக மனம் ஒன்றை விரும்பி விட்டால், அதனை அடைந்து திருப்தி அடையும்வரை அந்த மனம் ஓயாது. எப்பொழுதும் அதனையே சிந்தித்தவாறு இருக்கும். இது மனதின் இயல்பு எனலாம். இதற்கு உடல் கருவியாகப் பயன் படுகின்றது.

இவ்வாறு ஒன்றை விரும்பிய மனம், அதனை புலன்களின் வாயிலாகவும், உடலின் வாயிலாகவும் அனுபவித்து திருப்தி அடைந்து அத்துடன் தன் தேவையை நிறுத்திக் கொள்கின்றதா எனில், நிச்சயமாக கிடையாது.

அது தற்காலிகமான திருப்தியை மட்டுமே அடைந்துள்ளது. ஆதலால், அது மீண்டும், மீண்டும் அதன் சுவையை, சுகத்தை அடைய விரும்புகின்றது.

அது உணவு உண்பதில், உறவு கொள்வதில், இறைவனை வழிபடுவதில், பணம் சம்பாதிப்பதில், பயணம் செய்வதில் என எதில் வேண்டுமானலும் இருக்கட்டும், இந்த மனம் தற்காலிகமான திருப்தியை

மட்டுமே அடைந்து, மீண்டும் அதன் தேவைகளுக்கு தேடிக்கொண்டும், ஓடிக்கொண்டும் இருக்கின்றது.

இதன் விளைவாகவே மனிதன் ஓடிக்கொண்டே இருக்கின்றான், தன் தேவைகளுக்காக எதையோ தேடிக்கொண்டே இருக்கின்றான். தன் வாழ் நாள் இறுதிவரை ஓயாமல் ஓடி, ஓடி ஓய்ந்து போகின்றான்.

உடலின் ஓட்டத்தையும், மனதின் ஓட்டத்தையும் அறிந்து கொள்ள முடியாமல் ஒரு நாள் இந்த உலகத்தை விட்டும் ஓடி விடுகின்றான்.

இதற்கு என்னதான் தீர்வு?

இந்த மனதிற்கு எப்பொழுது முழுமையான திருப்தி உண்டாகும்?

மனம் என்பது பயிற்றுவிக்கப்பட்ட ஒரு மாபெரும் அந்தக்கரணம் (உடலின் உட்கருவி) எனலாம்.

அதாவது, மனிதன் எத்தகைய சூழ்நிலையில், எத்தகைய எண்ணங்களை ஏற்படுத்திக் கொண்டு, அதனை எவ்வாறு சித்தத்தில் சேகரித்து வைத்துக் கொள்கின்றானோ, அதற்கேற்ப அவனது மனமும் வடிவமைக்கப்பட்டு, அதன்படி அது அஹங்காரமாக **“நான்”** என்று அவனிடம் இருந்து வெளிப்படுகின்றது.

அதாவது, நமது எண்ணங்களே நம்மை உருவாக்குகின்றது எனலாம்.

அதனால்தான் மகா புருஷர்கள் மனதினை அறிந்து, அதனை சரியான முறையில் பக்குவப்படுத்தி, வழி நடத்தக்கூடிய ஆரம்பக்கல்வி முறைகளை மிகவும் அவசியமாகக் கருதினர்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் அதற்கு எத்தகைய போதனைகளை அதன் மனதிற்கு அருள வேண்டும் என்ற வரைமுறைகளை அன்றைய ஆன்றோர்கள் அறிந்திருந்தனர்.

அதற்கேற்ற கல்வி முறைகளை மிகவும் அழகாக அன்றே வகுத்திருந்தனர்.

அதனை அவரவர்கள் தாய் மொழியில் ஆழமாக அந்தக் குழந்தையின் பிஞ்சு நெஞ்சில் பதிய வைத்தனர்.

அதற்கேற்ற பாடத் திட்டங்கள், பழக்க வழக்கங்கள், பண்பு நலன்கள், பழகும் முறைகள் என மிகப்பெரிய பட்டியலை பரவலாக பட்டி, தொட்டி முதற்கொண்டு தாலாட்டு பாடல்களாகவும், பாட்டி சொன்ன கதைகளாகவும் மக்களிடையே பரப்பி வந்தனர்.

மனதினை வளமாக்கும் பயிற்சிகளை பலவாறாக பாமரமக்களிடையே பாடத் திட்டங்களாகவும், பல்வேறு விளையாட்டுகளாகவும் அன்று பழக்கப் படுத்தப்பட்டன.

அவைகள், இறைவனின் நாமங்களை (பெயர்களை) உபாசனை மந்திரமாக செபித்தல்,

ரூபங்களை பக்தி செய்தல், தியானம், பிராணயாமம் மற்றும் வாசியோகம் என்ற யோகக்கலையினை பயின்றல், மனதிற்கு மகிழ்ச்சியை கொடுக்கின்ற எளிமையான விளையாட்டுகள் போன்ற பலவாறான பயிற்சி முறைகளை பயின்று மனதை வளமாக்கி வந்தனர்.

இத்தகைய முறையான கல்வி முறைகளினாலும், பழக்க வழக்கங்களாலும் மனம் பண்பட்டு மனிதன் மகத்தானவனாக மாறமுடியும் என்று அறிந்திருந்தனர்.

இவ்வாறு மனதினை வளப்படுத்துவதினால் வருகின்ற நன்மையை மிக அழகாக அகத்திய மாமுனிவர் தன் பாடலில் எடுத்துரைத்துள்ளார்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரம் செம்மை யாமே.
- அகத்தியர் ஞானம்.

மனம் வளமானால் மந்திரம் செபிக்க வேண்டியதில்லை.
மனம் வளமானால் மூச்சு பயிற்சி அவசியம் இல்லை.
மனம் வளமானால் வாசியோகம் வேண்டியதில்லை.
மனம் வளமானால் அதுவே, மனதின் திரம் (**மனம் + திரம் = மந்திரம்**) எனலாம் என்கின்றார்.

இத்தகைய திரமான, திடமான மனதினை அடைவதற்கு மேற்கண்ட பல வழிமுறைகள் பயன் பாட்டில் இருந்தையும், இன்றும் இருப்பதையும் நம்மால் அறிய முடிகின்றது.

இதில் எது சாத்தியம் என்பது அவரவர்களின் பக்குவத்திற்கும், புரிதலுக்கும் ஏற்றவாறு அமைகின்றது. இருப்பினும், மனதினைக் கொண்டே மனதி(தன்)னை அறிவது அவசியம் ஆகின்றது.

ஒவ்வொரு மனித(ஜீவ)னின் மனமும் மூன்று முக்கிய குணங்களை அடைப்படையாகக் கொண்டு அமைகின்றது.

அவைகள், **சத்வம், ராஜஸம், தாமஸம்** என்பனவாகும்.

இதில் சத்வகுணம் மிகுந்த மனிதனிடம் தூய்மை, நேர்மை காணப்படும். மேலும், தனக்கு நேரும் கஷ்டங்கள், மற்றவர்களால் வருகின்ற விரோதங்களை பொருத்துக் கொள்ளுதல், தேசசேவை, பரோபகாரம், பணிவு, கருணை ஆன்ம ஞானத்தில் ஈடுபாடு போன்ற குண நலன்களைக் கொண்டவனாக இருப்பான்.

ராஜஸகுணம் மிகுந்த மனிதனிடம் சுறுசுறுப்பு, புத்திசாலித்தனம், வீர்யம், பொறாமை, சந்தோஷம், பொய் பேசுதல், தயவின்மை, கர்வம், காமம், குரோதம், துக்கம், ஹிம்ஸை முதலியவைகள் காணப்படும்.

தாமஸ குணத்தின் சுபாவம் அனாவசியமாக துக்கப்படுதல், நாஸ்திக சுபாவம், அதர்ம காரியங்களில் ஈடுபடுதல், புத்தி சக்தி குறைந்து புரிதல் இல்லாமை, தெளிவின்மை, பகுத்தறிவின்மை, குற்றமுள்ள எண்ணங்கள், எந்த காரியத்திலும் ஒழுங்கின்மை, சோம்பேறித்தனம், இரவு, பகல் என எப்பொழுதும் தூங்குதல் முதலிய சுபாவங்கள் அதிகம் காணப்படும்.

இதுபோன்ற மூன்று குணங்களை கொண்ட மனிதன், எந்த குணத்தில் அதிகமாக மேலோங்கி இருக்கின்றானோ அதற்கேற்ற செயலும் அவனிடம் காணப்படும்.

ஆதிமூலமான பரப்பிரம்மத்தின் பரம பதார்த்தங்கள் வெளிப்பட விரும்பியதின் விளைவாக, அனாதி காலமாக அடங்கியிருந்த விதையான அந்த மூலப்பிரகிருதி மகத்தத்துவமாக மாறி, மகத்தத்வமே அகங்கார தத்வமாகி, அகங்கார தத்துவமே மேற்கண்ட மூன்று குணங்களாக வெளிப்பட்டன என சாஸ்திரம் இந்த பிரபஞ்ச உற்பத்தியைப் பற்றி மிகவும் அழகாக வர்ணிக்கின்றது.



இந்த மூன்று குணங்களும் மூலப்பிரகிருதியின் சக்தியாக வெளிப்பட்டு, முக்குணங்களில் முதற் குணமாகிய சுத்த சத்வகுணத்திற்கு **“மாயை”** என்றும், அந்த மாயையில் பிரதிபலித்த பரப்பிரம்மத்தின் சாயலான ஞான நிழலுக்கு **“அந்தரியாமி”** அல்லது **“ஈஸ்வரன்”** என்றும் சாஸ்திரம் அழைக்கின்றது.

அடுத்து, இரண்டாவது குணமாகிய ராஜஸகுணம் அனேக ரூபங்களாய் பிரிந்து அவித்தைகள் என்ற அறியாமைகளால் ஆனது.

இந்த அவித்தைகளில் பிரதிபலித்த பரப் பிரம்மத்தின் நிழலுக்கு **“ஜீவர்கள்”** என்று பெயர்.

இதனாலேயே ஜீவர்கள் அறியாமையில் இருக்கின்றனர்.

அடுத்து, மூன்றாவது குணமாகிய தாமஸகுணம் ஜீவர்களுக்கு போகத்தை அனுபவிக்கும் பொருட்டு மாயாசகித ஈஸ்வரனுடைய அனுக்கிரகத்தினாலே ஆவரணம், விக்ஷேபம் என இரண்டு சத்திகளாகப் பிரிந்து நின்றது.

இதில் ஆவரணம் என்பது மறைக்கும் சக்தி என்றும், விக்ஷேபம் என்பது தோன்றும் சக்தி என்றும் அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு பிரிந்து நின்ற ஆவரணம் என்ற மறைக்கும் சக்தியானது ஒவ்வொரு ஜீவர்களை தன்னை யார்? என்று அறிந்துக் கொள்ள முடியாமல் அறியாமைகளினால் மறைத்துக் கொண்டு, ஜீவர்களின் அநித்தியமான சரீரங்களையும், மனதையும் **“நான்”** என்று அபிமானிக்கும்படி செய்து, விக்ஷேப சக்தியின் மூலமாக இந்த உடலையும், உலகத்தையும் உண்மையானபடி தோன்றச் செய்து, அனைத்து ஜீவர்களையும் தன் மாயா சக்தியால் மயக்கி, அந்த பரப்பிரம்மமாகவே **“நான் இருக்கின்றேன்”** என்ற உண்மையை அனைத்து ஜீவர்களுக்கும் தெரிய விடாமல் மறைத்து விடுகின்றது.

அதாவது, பரப்பிரம்மத்தின் சத்வகுணத்தில் உண்டான மாயை, அந்த மாயையில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் மற்றும், ரஜோகுணத்தில் தோன்றிய அறியாமையில் பிரதிபிம்பித்த ஜீவர்களை, தாமஸ குணத்தின் மறைத்தல் மற்றும் தோன்றுதல் என்ற இரண்டு சக்திகளின் வாயிலாக அவர்களின் உண்மை சொருபத்தை மறைத்து, பொய்யான சரீரங்களையும்,

மனதையும் உண்மை போன்று தோன்றச்செய்து எமாற்றுகின்றது.

இவ்வாறு, ஒவ்வொரு ஜீவர்களும் மூலப் பிரக்ருதியின் இயல்பான சக்தியாகிய இந்த மூன்று குணங்களும் கலந்து நிற்கின்றது. இதில், அனைத்து ஜீவர்களுக்கும் இந்த மூன்று குணங்களில் ஏதாவது ஒரு குணம் மட்டும் மற்ற இரண்டு குணங்களையும் விட மேலோங்கி நிற்கின்றது.

இவ்வாறு, இந்த மூன்று குணங்களினால் ஆட்டுவிக்கப்படுகின்ற மனம் தன் இருப்பிடத்தை அறியாத காரணத்தினால், இதுப்போன்ற குண பேதங்களில் ஈடுபட்டு அவ்வப்பொழுது தற்காலிகமான இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கின்றது.

இத்தகைய சுக துக்க அனுபவங்கள் யாவும் புலன்களால் அல்லது இந்திரியங்களால் நுகரும் விசயங்களால் நமக்கு உண்டாகும் உணர்ச்சிகளே.

இந்திரியங்களின் ஆதாரமும் குணங்களே, விசயங்களின் ஆதாரமும் குணங்களே. அதாவது, விசயங்களின் குணங்களே அனைத்து இந்திரியங்களில் விருத்தியாகின்றன.

இதையே 'குணங்கள், குணங்களில் செயல் படுகின்றன' என்ற பகவத் கீதை வாக்கியமாக, **'குணா குணேஷு வர்தந்தே'** (3-28) என்று அறிவிக்கின்றது.

குணங்கள், செயல்கள் இவற்றினுடைய பிரிவு-களின் உண்மையை அறிந்தவன், **'குணங்கள்**

குணங்களில் செயல்படுகின்றன’ என்று கருதி அவற்றில் பற்றற்றிருப்பான். - (பகவத் கீதை 3 - 28).

குணங்களைக் கடந்து சென்ற பரமதத்துவ பரமாத்மாவில் நிலைப்பெற்ற பரமபுருஷர்கள் மட்டுமே இந்த மூன்று குணங்களுக்கு ஏற்ப கர்மங்களில் உள்ள பிரிவினைக் காண முடியும்.

உதாரணமாக, தாமஸ குணத்தில் ஒருவன் இருந்தால், அதற்கேற்ற காரியங்களை அவன் செய்வான்.

அவைகள், அடிக்கடி தூங்குதல், கவனக்குறைவு, எதிலும் நம்பிக்கை இன்மை, எந்த காரியத்திலும் சுய நலம், சோம்பேறித்தனம், மற்றும் அகம்பாவம் என அனேக துற்குணங்கள் அவனுக்கு சுபாவமாக இருக்கும்.

ராஜஸகுணம் இருந்தாலோ, சுய நலத்துடன் கூடிய இறைவழிபாடு, வீரம், ஆணவம், பிடிவாதம், பொறாமை, உயிர்களை ஹிம்ஸை செய்தல் போன்ற குணங்களை சுபாவமாகக் கொண்டிருப்பான்.

சத்வகுணம் கொண்டவனோ, தியானம், பணிவு, சேவை, கருணை, அன்பு, ஆத்மஞான விசாரம் போன்ற குண நலன்களைக் கொண்டிருப்பான்.

இந்த குணங்கள் அனைத்தும் மாறும் இயல்புடையது. அதனால், ஒவ்வொருவரும் செய்யும் காரியங்களிலும் ஏற்றத்தாழ்வுகளைக் காண முடிகின்றது.

ஒருவன் செய்யும் செயலை வைத்தே அவன் எந்த குணத்தில் இருக்கின்றான் என்று கண்டு பிடித்துவிட முடியும். இந்த குணபேதங்களை அறியமுடியாமல் காரியம் ஆற்றிக்கொண்டிருப்பவன் மூடன்.

ஆனால், தன்னை (பரமாத்மாவாக) அறிந்த தத்துவ ஞானிகள் தங்களிடையே காணப்படுகின்ற குணங்களைக் கடந்து, குணாதீதனாக இருப்பார்கள்.

இத்தகைய ஞானிகள் மட்டுமே ஒருவனது மனதினைப் பொருத்து அவனது குணங்கள் எப்படி இருக்கும் என்றும், அதற்கேற்ப அவனது செயல்கள் எப்படி இருக்கும் என்பதையும் நன்கு அறிந்து வைத்திருப்பார்கள்.

குணம் தன்னுடைய செயலை தானே செய்து கொள்கின்றது.

ஞானிகள் அறிந்துக் கொண்ட இந்த புரிதலையே பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையில் ***"குணங்கள் குணங்களிலேயே செயல்படுகின்றது"*** என்கின்றார்.

மகா புருஷர்கள் கர்மத்தில் (செயல் செய்தாலும்) பற்று கொள்வதில்லை.

கண், காது, மூக்கு, நாக்கு மற்றும் தோல் போன்ற இந்திரியங்கள் வழியாக உள்வாங்கப்படும் ஒவ்வொரு விசயமும், நமக்குள் பல எண்ணங்களை உண்டாக்குகின்றன.

அந்த எண்ணங்கள் அவற்றுக்குத் தொடர்பு உடைய பல்வேறு எண்ணங்களை உண்டாக்குகின்றன.

விசயங்கள் மட்டுமா எண்ணங்களை உண்டாக்குகின்றன?

இன்னதென்று நாம் அறிய முடியாதவாறு, தொடர்ந்து நம்முள் பல எண்ணங்களும், அவற்றுக்குத் தொடர்புடைய பல்வேறு எண்ணங்களும் தோன்றியபடி உள்ளன.

நாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணமும், (கனவு காணும் போதும் கூட) நம்முள் எண்ணங்கள் எழுந்தவாறே இருக்கின்றன. கடலில் தொடர்ந்து அலைகள் எழுவதைப்போல், இடைவெளி இன்றி நம்முள் எண்ணங்கள் எழுந்தவாறே இருக்கின்றன.

ஒரு அலை ஓய்வதற்குள், மற்றோரு அலை உருவாவதைப் போல, ஒரு எண்ணம் மறையும் முன்பே, மற்றொரு எண்ணம் உருவாகின்றது.

அந்த எண்ணங்கள் வேறெந்த விசயத்திலோ, உணர்விலோ ஒன்றி, அதையே பற்றி நிற்கும் போது, இந்திரியங்கள் விஷயங்களை, உள்வாங்கியவாறே இருந்தாலும், நாம் அவைகளை அறிவதில்லை.

கண்களும், அவற்றிற்கு ஆதாரமாக மனமும் ஒருங்கே இணைந்தே காட்சியைக் காண்கின்றன. காதுகளும், அவற்றிற்கு ஆதாரமாக மனமும் ஒருங்கே இணைந்தே சப்தத்தை கேட்கின்றன. தோல், நாக்கு,

மூக்கு ஆகிய இந்திரியங்களும், இவ்வாறே மனதுடன் ஒருங்கிணைந்து விசயங்களை பெறுகின்றன.

நமக்குள், தொடர்ந்து புலன்கள் வழியாக விசயங்கள் கிரஹிக்கப்பட்டு, அவை சார்ந்த எண்ணங்கள் வளர்ந்தவாறே இருக்கின்றன. நம்முள் வளரும் எண்ணங்கள், இந்திரியங்களைச் செயலாற்றத் தூண்டுகின்றன.

இவ்வாறு, தானே உள்ளிருந்து எழுகின்ற எண்ணங்கள், வெளி விசயங்களால் உள்ளே நுழைகின்ற எண்ணங்கள் ஆகியவற்றின் ஒட்டு மொத்த தொகுப்பே **"மனம்"** எனப்படுகின்றது.

இதுவரை நாம் கேள்விப்பட்டேயிராத ஒரு விசயம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். நம் சித்தத்தில் அது குறித்த பதிவுகளே இருக்காது.

அந்த விசயம் நமக்குப் பிரியமானதா, பிரியமற்றதா என்றோ, அதை நாம் அனுபவிப்பது தர்மமா, தர்மமில்லையா என்றோ புத்திக்குத் தெரியாது.

நம் மனமோ, அந்த விசயங்கள் குறித்த எண்ணங்களே இன்றி இருக்கின்றது. இது மனதின் நிர்விகல்பமான நிலை.

அந்த விசயத்தைக் குறித்து கேட்டோ, படித்தோ அறிந்ததும், மனம் அது குறித்த கருத்துக்களை உருவாக்கிக் கொள்கின்றது.

இவை சங்கல்பங்கள் (முடிவான கருத்துகள்) என்று அழைக்கப்படுகின்றன.

எந்த ஒரு விசயமும், புலன்களுக்கு, முதன் முறையாகப் பரிச்சயம் ஆகும் வரை, மனம் அது குறித்த எண்ணங்கள் இன்றி, சித்தம் அது குறித்த பதிவுகள் இன்றி நிர்விகல்பமாக இருக்கின்றன.

புலன்களால், தானாக இன்னதென்று அறிய முடியாத விசயத்தை, மனம் பல்வேறு கோணங்களிலும் கேள்விகளை எழுப்பி, சித்தத்தில் உள்ளப் பதிவுகளின் துணை கொண்டு, புத்தியின் முடிவெடுக்கும் திறனால் தீர்மானித்து அறிகின்றது.

இந்த அறிவு, உணர்வு சார்ந்த தீர்மானங்களே சங்கல்பங்கள் எனப்படுகின்றன.

மென்மேலும் விளையும் அனுபவங்களால் இந்த சங்கல்பங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. புதிய அறிவால், மனம் ஏற்கனவே இருந்த அறிவை புதுப்பித்தவாறே இருக்கின்றது.

புதிய உணர்வால், மனம் ஏற்கனவே விளைந்து பதிந்துள்ள உணர்வுகளை தெளிவுபடுத்திக் கொண்டே இருக்கின்றது. இது ஒரு தொடர் நிகழ்வு எனலாம்.

இது எந்த காலத்திலும் நின்று போவதில்லை. சங்கல்பம் தான் மனம். மனமே சங்கல்பம் எனலாம்.

சங்கல்பம் மனதிலேயே உள்ளது. எங்கு சங்கல்பம் உள்ளதோ, அங்கு மனம் உள்ளதென்று

அறியப்படுகின்றது. எப்பொழுதும் சங்கல்பமும் மனமும் பிரிவதில்லை.

இவ்வாறு, தொடர்ந்து எழும் எண்ணங்கள் எல்லாம், மனதின் மற்றோரு பரிமாணமான **'அஹங்காரம்'** என்ற எண்ணத் தொகுப்பை ஆதாரமாகக் கொண்டே விளைகின்றன.

'நான்' என்ற உணர்வு அகந்தை அல்லது **"அஹங்காரம்"** எனப்படுகின்றது. இது என்னுடையது என்ற உணர்வு **"மமதை"** எனப்படுகின்றது.

இந்த இரண்டு கற்பனைகளும் விளைவது மனதிலேயே. இந்த இரண்டு எண்ணங்களே, மற்ற எல்லா எண்ணங்களுக்கும் மூலமாக இருக்கின்றன.

நான் காரியமாற்றுபவனாக இருக்கின்றேன் என்னும் எண்ணமே **'அஹங்காரம்'** எனப்படுகின்றது.

அந்தக்கரணங்களில், **'நான்'** என்ற ஸ்புரணம் (அகந்தை), அது சார்ந்தெழும் **'எனது'** உள்ளிட்ட விருத்திகளைத் தொகுத்து **'அஹங்காரம்'** என்றும் அழைக்கப்படுகின்றது.

பொதுவாக நமக்கு நாமே ஒரு உருவகம் தந்து கொள்வது மட்டுமின்றி, நாம் நம்மைச் சுற்றி உள்ள பலவற்றுடன் ஒரு தொடர்பை, பந்தத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டே எண்ணங்களை வளர்க்கின்றோம்.

நம் நாடு, நம் மொழி, நம் இனம், நம் ஊர், நம் வீடு, நம் குடும்பம் என்றும், என் மனைவி, என்

குழந்தை, என் தொழில், என் பெற்றோர் என்றும் நம்மை ஆதாரமாகக் கொண்டே எல்லாவற்றையும் அணுகுகின்றோம்.

பொதுவில், **'நான் இன்னார்'** என்ற எண்ணமான அகந்தையே, **'இது என்னுடையது'** என்ற எண்ணமான மமதைக்கு மூலமாக விளங்குகின்றது.

அதுவே **'இதை நான் செய்கின்றேன்'** என்ற எண்ணத்திற்கும் மூலமாகின்றது.

'நான்' என நமக்கு ஒரு (நாம, ரூப, குண, திறன் சேர்ந்த) இருப்பு இருப்பதான கற்பனையே, சுற்றிலும் உள்ளனவற்றுடன் நம்மைத் தொடர்புபடுத்தி, **'இது என்னுடையது'** என்ற கற்பனையை உண்டாக்குகின்றது.

அந்தக் கற்பனையே, நம்மைச் சுற்றிலும் நிகழும் செயல்களில் நம்மை இணைத்துக் கொண்டு, **'நான் இந்தச் செயல் செய்கின்றேன்'** என்ற கற்பனையை விளைக்கின்றது.

அந்தக் கற்பனையின் விருத்தியே, இந்தச் செயலின் விளைவால், **'நான் சுகமடைகின்றேன்'** அல்லது **'நான் துக்கப்படுகின்றேன்'** என்ற கற்பனைகளை உண்டாக்குகின்றது. இவை யாவும் வெறும் எண்ணங்களே.

நாம் **'எனக்கு ஒரு இருப்பு உண்டு'** என்று, நம் மனதோடு நம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளும் போது, நான் இந்தச் செயலை செய்கின்றேன் என்று பாவித்துக் கொள்கின்றோம். அதனால், 'நான்

இன்பத்தை (அல்லது துன்பத்தை) அனுபவிக்கின்றேன்' என்றும் பாவனை செய்து கொள்கின்றோம்.

'நான்' இல்லையேல், **'எனது'** இல்லை. நான் (இன்னாராக, இக்குணங்களுடன், இத்திறன்களுடன்) இருக்கின்றேன் என்ற கற்பனை முதலில் விளைகின்றது.

அது, நமக்கு வெளியே உள்ள ஒரு பொருளைக் கண்டவுடன், அல்லது அந்தப் பொருளைப் பற்றி நினைத்தவுடன், மனம் அந்தப் பொருளில் பரவி வியாபிக்கின்றது.

அந்த மனதின் வியாபகத்தின் விளைவே, 'இது என்னுடையது அல்லது இது என்னுடையதல்ல' என்னும் கற்பனை உண்டாகின்றது.

நம் இந்திரியங்கள் மீதும், நம் உடல் மீதும், 'இதுவே நான்' அல்லது 'இவை என்னுடையவை' என்ற அபிமானமாக விளையும் மூல எண்ணமே அஹங்காரம்.

இதன் ஆதாரத்தில் விளையும் அபிமானங்களே, 'நான் செயல் செய்பவன்', 'நான் அனுபவிப்பவன்' ஆகிய எண்ணங்கள். **'நான் கர்த்தா (காரியமாற்றுபவன்)', 'நான் போக்தா (அனுபவிப்பவன்)'** என்று உண்டாகின்றது.

அஹங்காரத்தின் இரு இயல்புகள் நான் செய்கின்றேன், நான் அனுபவிக்கின்றேன் என்பதாகும்.

‘இது நான்’, ‘இவை என்னுடையவை’, ‘இதை நான் செய்கிறேன்’ எனக் கருதும் இயல்பு கர்த்ருத்வம் எனப்படுகின்றது. அதாவது, இந்த உடலுக்கும்,

இந்திரியங்களுக்கும், செயல்களுக்கும், நான் மட்டுமே சொந்தக்காரன் என்ற எண்ணம்.

செயல்களுக்கு நான் அதிகாரி என்பதின் அடிப்படையில், விளைந்த செயல்களால் உண்டான சுக, துக்கங்களுக்கு ‘நான் உரிமையாளன்’ என்றும் கருதுகின்றது. சுகங்களையும், துக்கங்களையும் தானே அனுபவிப்பதாகவும் கருதுகின்றது.

விசயங்கள் நமக்கு அனுகூலமாக, பிரியமானதாக இருப்பின், நாம் சுகம் அனுபவிப்பதாகக் கருதுகின்றோம். விசயங்கள் நமக்கு பிரதிகூலமாக, பிரியமற்றதாக இருப்பின், நாம் துக்கம் அனுபவிப்ப தாகக் கருதுகின்றோம்.

ஆக, நம் அஹங்காரத்தின் விளைவாகவே, நாம் சுக துக்கங்களை அனுபவிப்பதாகக் கருதுகிறோம்.

இத்தகைய அஹந்தையும், மமதையும் நீங்கி ஆனந்தமுடன் வாழ்வதையே **‘மோக்ஷம்’** என்று வள்ளுவப்பெருமானர் தன் குறட்பாவில் மிக அழகாக அறிவுறுத்துகின்றார்.

'யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்' - திருக்குறள்.

உடம்பை யான் எனக் கருதலும் தொடர்பு இல்லாத பொருளை எனது எனக்கருதலுமாகிய மயக்கத்தை போக்குகின்றவன், தேவர்க்கும் எட்டாத உயர்ந்த நிலையை அடைகின்றான்.

இதையே **“மோக்ஷம்”** என்றும் **“நிலையான ஆனந்தம்”** என்றும் சாஸ்திரம் அறிவிக்கின்றது.

“நன்மை - தீமை, மற்றும் சுகம் - துக்கம் என்பன மனதினால் விளைபவை. **‘நாம்’** உண்டாக்குவதல்ல”.

விழிப்பு நிலையில் பல்வேறு எண்ணங்களை கொண்டு, அதற்கேற்ற செயலைச் செய்து, அதனால் உண்டாகின்ற சுக, துக்கங்களினால் பாதிக்கப்பட்டு, மன அமைதி இன்றி, இந்த உலகத்தை உண்மை என்று கருதி ஓடிக்கொண்டிருக்கின்றோம்.

அதுப்போலவே, கனவு நிலையில் பல்வேறு எண்ணங்களைக் கொண்டு, அதற்கேற்ற செயலைச் செய்து, அங்கும் பயம், துக்கம், சந்தோசம் என பலவாறான பாதிப்புகளை அடைந்து, அந்த உலகத்தையும் உண்மை என்று அபிமானிக்கின்றோம்.

அந்த கனவு உலகில் இருக்கும்வரை இந்த விழிப்பு நிலை உலகத்தையும் உறவுகளையும், விழிப்பு நிலையில் இருக்கும் வரை கனவு நிலை உலகத்தையும், உறவுகளையும் மறந்து விடுகின்றோம்

கனவு கலைந்து விழிப்பு நிலைக்கு வந்தவுடன் இந்த விழிப்பு நிலை உலகத்தையும் உண்மை என்று அபிமானிக்கின்றோம்.

இவ்வாறு மனம் கற்பனைகளினால் வாழ்ந்து கொண்டு இருப்பதை நாம் அறிய மறுக்கின்றோம்.

அடுத்து, விழிப்பு, கனவு என்ற இந்த இரண்டு நிலைகளையும் கடந்து ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் பொழுது, எதுவுமே தெரிவதில்லை. அந்த உலகத்தை அறிய முடிவதில்லை.

இந்த விழிப்பு நிலையில் கண்ட உலகம், நம்முடைய உறவுகள், நம்முடைய உடல், மனம் என எதுவுமே அங்கு இருப்பதில்லை.

ஏதுமற்ற சூனியம் மட்டுமே அந்த ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதாக தவறாக நினைத்துக் கொள்கின்றோம்.

ஆனால், உறக்கம் கலைந்து விழிப்பு நிலைக்கு வந்தவுடன் நான் நன்றாக, ஆனந்தமாக உறங்கினேன் என்று எப்படி அந்த ஆழ்ந்த உறக்க அனுபவத்தை உணர முடிந்தது?.

கனவு நிலையில் கண்ட கனவுகளை எவ்வாறு விழிப்பு நிலையில் அறிய முடிந்தது?

விழிப்பு நிலை அனுபவங்களை தற்பொழுது அனுபவித்துக் கொண்டிருப்பது எது?

கனவு உலகத்தை, கனவு கலைந்ததும் கற்பனை என்று ஒப்புக்கொள்கின்ற மனம், விழிப்பு நிலையான இந்த நினைவு உலகத்தை கற்பனை என்று ஒப்புக்கொள்ள மறுக்கின்றது.

அதற்குக் காரணம் இந்த நினைவு உலகத்தின் நம்முடைய அனுபவங்கள் தொடர் நிகழ்வுகளாக இருப்பதினால், இன்று தொடங்கிய ஒரு காரியத்தை மறுநாள் விட்ட இடத்தில் இருந்து தொடங்க முடிகின்றது என்பதினால் இதை உண்மை என்றும், கனவை கற்பனை என்றும் இந்த மனம் நம்புகின்றது.

இங்கு கால, தேசத்தை (Time & Space) மனம் கற்பித்துக் கொண்டுள்ளதால், இதுபோன்ற பிரச்சனைகள் மனதிற்கு உண்டாகின்றது.

அதாவது, கனவு உலகத்தில் நாம் வாழ்ந்து முடிகின்ற கால, தேசத்தை (கனவு காணுகின்ற நேரமும், இடமும்) எவ்வளவு நேரம், எங்கு இருந்தோம் என்று கணக்கிட முடியாமல் இருக்கின்றதோ, அதுபோன்று, நினைவு உலகத்தில் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலமும், தேசமும் உண்மையில் கணக்கிட முடியாமல் இருக்கின்றது.

அது எவ்வாறு எனில், இந்த உலகத்தில் ஒருவர் இந்தியாவிலிருந்து வெளி தேசங்களுக்கு செல்வதாக வைத்துக் கொள்வோம். அவர் பயணம் செய்த ஒரு நாள் பயணத்தில் ஒரு இரவோ, அல்லது ஒரு பகலோ அவருக்கு இல்லாமல் எங்கு போய் விடுகின்றது?

அதாவது, இங்கு பகலில் புறப்பட்டவர் அந்த தேசத்தில் மீண்டும் பகலில் இருக்கின்றார். அல்லது இரவில் புறப்பட்ட இவர் அந்த தேசத்தில் மீண்டும் இரவில் இருக்கின்றார்.

ஆகவே, இந்த கால, தேசங்களை நாமாக கற்பித்துக்கொண்டு அதை 24 மணி நேரத்தில் ஒரு நாள் என்று இந்த பூமியில் மட்டும் கணக்கிட்டு வைத்துக்கொண்டுள்ளோம். அதுவே, வெட்டவெளியில் இந்த கணக்கு ஒத்துவராது.

ஆகவே, நம்முடைய அற்ப மனதினாலும், புத்தியினாலும் இவைகளை கடக்க முடியாது.

கனவு காணுகின்ற காலம், தேசம் எவ்வளவு என்று எவ்வாறு நமக்குத் தெரியாதோ, அவ்வாறே நினைவில் காணுகின்ற காலம், தேசம் எவ்வளவு என்று நமக்குத் தெரியாது.

அதனாலேயே, மனிதனுக்கு தன் ஜனன, மரணம் தெரிவதில்லை. பிறக்கின்ற நேரத்தை வைத்து காலத்தையும், பிறந்த இடத்தை வைத்து தேசத்தையும் குறித்துக் கொண்டாலும், அந்த கால, தேசம் இவனுக்கு ஆழ்ந்த உறக்கத்தில் எங்கு இருந்தது? இவன் தாயின் கற்பத்தில் வருவதற்கு முன்பு எங்கு, எவ்வளவு காலம் இருந்தான்?

காலம் என்பது காலதேவன் என்ற பரப்பிரம்மத்தினிடம் இருந்து வெளிப்பட்ட சக்தியாகும். அதற்கு '**மாயை**' என்று பெயர். அதன் கட்டுப்பாட்டில் படைத்தல், காத்தல், அழித்தல் என்பது உள்ளது.

மனிதனின் மனம் நினைப்பது போன்று அதை அவன் இஷ்டத்திற்கு மாற்றி அமைத்துக் கொள்ள முடியாது.

இதை அறியாமல், இவனே செய்வது போன்று அனைத்தையும் அபிமானித்துக் கொள்கின்றான்.

மேலும், இவன் நல்லவன் - அவன் கெட்டவன், இவன் ஆஸ்திகன் - அவன் நாஸ்திகன், இவன் பணக்காரன் - அவன் ஏழை, இவன் ஞானி - அவன் அஞ்ஞானி, இவன் யோகி - அவன் போகி என்று பலவாறாக மனதினால் கற்பித்துக் கொள்கின்றான்.

அவரவர்கள் மனம் குழந்தைப் பருவத்தில் இருந்து எப்படி பயிற்றுவிக்கப் பட்டிருக்கின்றதோ, அதற்கேற்ப அவனது தற்போதைய வாழ்க்கை முறை இருக்கின்றது. மேலும், இதில் அவனது பூர்வ சம்ஸ்காரங்களுக்கு ஏற்ப அவனுக்கு சூழ்நிலைகள் உண்டாக்கி கொடுக்கப்படுகின்றது.

இது எதுவுமே இவனது கையில் இல்லை. ஆனால், இவன் அனைத்தையும் தான் செய்வதாக கருதுகின்றான்.

இதுவே, '**மாயை**' எனப்படுகின்றது.

“என்னுடைய அனுபவங்களை மாயை என்று கூறுகிறீர்களே, இந்த உலகத்தில் இத்தனை காரியங்கள் கண்கூடாக நடந்து கொண்டிருக்கும்போது இதை எப்படி மாயை என்று கூறலாம்?”

மாயை என்றால் அடியோடு இல்லாத வஸ்து என்று நினைத்துக் கொள்வதினால் இந்த கேள்வி எழுகின்றது.

மாயை அப்படி இல்லை.

அது இருப்பதாக நினைக்கின்ற வரை இருப்பதாகவே தோன்றும். அது, **‘முயல் கொம்பு’** போன்று இல்லை. **‘கானல் நீர்’** போன்று இருக்கின்றது.

கானல் நீர் கண்ணுக்குத் தெரிகின்றது. ஆனால் அதில் நீர் இல்லை. அதைக் குடித்து நாம் தாகம் தணித்துக் கொள்ள முடியாது.

கானல் நீர் உண்மையான நீர் இல்லை என்று அறிந்தவர்களுக்கும்கூடக் கானல் நீர் தெரியத்தான் செய்யும்.

அதுப்போலவே, உலகை மாயம் என உணர்த்த வந்த ஞானிகளுக்குக் கூட இந்த உலகம் தெரியத்தான் செய்யும். ஆனால், அது சத்தியமல்ல என்று அவர்கள் அறிவார்கள்.

இந்த உலகமும் பிரம்மத்தைச் சார்ந்த ஒரு தோற்றமே, அதற்கு ஆதாரமான பிரம்மம் ஒன்றே

நிரந்தர உண்மை என்று அறிகின்ற பொழுது, காரியங்கள் அனைத்தும் நின்று போகின்றன.

அடியோடு இல்லாத வஸ்துவல்ல இந்த உலகம். ஞானம் வருகின்ற வரையில் இருக்கின்ற தோற்றம் அது.

கனவு காண்கிற வரையில் கனவு உண்மையாக இருந்து, நாம் விழித்துக் கொண்ட பிறகு கனவு உண்மையல்ல என்பதுப் போல, நாம் அஞ்ஞானத்தில் தூங்கிக் கொண்டிருக்கிற வரையில் உலகம் உண்மையாகத் தெரிந்து, நாம் ஞான நிலையில் விழித்துக் கொண்டவுடன் மறைந்து போகின்றது.

இந்த மாயை-யை அறிய விரும்புகின்ற ஜீவர்களுக்கு அவன் அருள் இருந்தால் மட்டுமே அனைத்தும் விளங்கும்.

அந்த அகண்ட பரிபூரண வஸ்துவே அனைத்து ஜீவர்களிலும் அந்தர்யாமியாக இருந்துக் கொண்டு, அவைகளை வழி நடத்துகின்றது.

அதாவது, பொம்மலாட்டம் நிகழ்ச்சியில் கவனித்தோமானால், அங்கு ஒவ்வொரு பொம்மையும் பலவிதமான செயல்களை மிகவும் நுட்மாக செய்வதை நாம் காண்கின்றோம்.

இவைகளைக் காண்கின்ற குழந்தைகளுக்கு அந்த பொம்மை ஆடுவதும், ஓடுவதும் என பார்பதற்கு உண்மைப் போன்றே தெரியும். ஆனால், அந்த பொம்மைகளை அந்த திரைக்கு பின்னால் இருந்துக் கொண்டு ஒருவன் ஆட்டுவிப்பதையும், அவன்

நிறுத்தினால் அந்த பொம்மைகள் செயல் இழப்பதையும் அந்த குழந்தை அறியாது. காரணம், அதற்கு அதை அறிந்துக் கொள்கின்ற அளவிற்கு (மனம்) புத்திசக்தி இன்னும் வளரவில்லை.

இதையே, நம்முடைய அன்றாட வாழ்வில் நடக்கின்ற இந்த பொம்மலாட்ட நிகழ்வுகளை அந்தந்த பொம்மையின் (உடலின்) உள்ளே இருந்துக் கொண்டு ஒருவன் ஆட்டுவிக்கின்றான் என்பதை அறியக்கூடிய (மனம்) புத்தி சக்தி பெரும்பாலானவர்களுக்கு இன்னும் உண்டாகவில்லை எனலாம்.

இந்த ஜீவர்கள் என்ற பொம்மைகளை ஆட்டுவிக்கின்றவன் ஆட்டத்தை நிறுத்திவிட்டால், இந்த பொம்மை (உடல்) செயல்படாது.

இதனை நாம் ‘இறப்பு’ என்கின்றோம்.

இறப்புக்கு முன்பு, தன்னுடைய உண்மை இருப்பு நிலையான **“நான் இருக்கின்றேன்”** என்பதை மனிதனை தவிர மற்ற எந்த ஜடப்பொருட்களும், மிருகங்களும் அறியாது.

காரணம், அவைகளுக்கு தன் இருப்பை அறியும் ஆற்றலான ஆறாவது அறிவு கொடுக்கப்படவில்லை. ஆனால், மனிதனும் அந்த ஆறாவது அறிவைக் கொண்டு தன்னை அறியாமல் இருப்பது மனிதப் பிறவியில் மிகப்பெரிய இழப்பு எனலாம்.

அந்த இருப்பு உள்ளே இருப்பதினால்தான் அவனது கண்கள் காட்சியைக் காண்கின்றது. காதுகள் பேச்சை கேட்கின்றது. மூக்கு மணத்தை நுகர்கின்றது, நாக்கு ருஷியை சுவைக்கின்றது, தோல் உணர்ச்சியை உணர்கின்றது. இந்த இந்திரியங்களின் அனைத்து அனுபவங்களுக்கும் அந்த **‘இருப்பே’** (ஆத்மாவே) காரணமாக இருக்கின்றது.

அதுவே, அந்த இருப்பு வெளியேறியவுடன் இறப்பு ஏற்பட்ட உடலில் அனைத்து இந்திரியங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

இருப்பினும், அதனால், தன்னை சுற்றிலும் அமர்ந்துக் கொண்டிருக்கின்ற உறவுகளை காண முடிவதில்லை, காதுகள் இருந்தும் மற்றவர்கள் கதறி அழுவதை கேட்க முடியவில்லை. மூக்கு இருந்தும், அருகே ஏற்றி வைக்கப்பட்ட ஊதுவற்தியின் நறுமணத்தை நுகர முடியவில்லை. நாக்கு இருந்தும் தனது வாயில் போடும் வாக்கரிசையை சுவைக்க

முடியவில்லை. தோல் இருந்தும் கட்டிய மனைவி தொடுவதை உணர முடிவதில்லை.

ஆக, இது நாள்வரை இறப்பு ஏற்பட்ட உடல், இயங்கிக் கொண்டிருந்ததற்கு காரணமான இருப்பு எது?

இதை, இந்த மனம் (புத்தி) அறிந்துக் கொள்வதில் அக்கரைக் காட்டாமலேயே இருந்து விட்டு, இறந்த ஸ்தூல உடலில் இருந்து, சூக்ஷுமமாக வெளியே வந்து, சேகரித்துக் கொண்ட சம்ஸ்காரங்களுக்கு ஏற்ப தனக்கு உடலை மீண்டும் தேர்ந்தெடுக்கின்றது.

அதாவது, இந்த ஸ்தூல உடலை பயன்படுத்தி, புலன்களின் வாயிலாக அறிந்துக் கொண்ட விசயங்களையும், பூர்வ சம்ஸ்காரங்களையும் கொண்டு, அவைகளின் ஒட்டுமொத்த தொகுப்பான இந்த சூக்ஷுமமான மனம் உண்டாகி, அவைகளை 'இன்னது', 'இன்னது' என்று புரிந்துக் கொள்ள புத்தி சக்தியாக மாறி, அவைகளை சித்தத்தில் (அறிவாக) சேகரித்து, அதனை அஹங்காரமாக இதுவரை வெளிப்படுத்தி வந்தது.

இந்த மனமே பரு உடல் கிடைக்க காரணமாக இருந்தது. அதாவது, அதனது இதற்கு முந்தைய பல்வேறு பிறவிகளினால் உண்டான பூர்வ சம்ஸ்காரங்களின் பதிவுகளுக்கு ஏற்ப அவைகளை அனுபவிக்க விரும்பி அதற்கேற்ற உடலை உருவாக்கிக் கொண்டது.

இதிலிருந்து இந்த மனம் அழியாமல், உடல் எடுக்கின்ற பிறவி நிற்காது என்பது உறுதி செய்யப் படுகின்றது.

இந்த மனம் ஆத்மாவை மறைத்துக் கொண்டு, ஆனந்தத்தை நாடுகின்றது.

இது எவ்விதம் ஆத்மாவை மறைக்கின்றது எனில், பிரகாசமான சூரியனை, மேகம் மறைப்பது போன்று காணப்படுவதைக் கண்டு, மேகம் சூரியனை விட பெரியது என்று கூறிவிட முடியாது. அதுப்போல, மனம் ஆத்மாவை மறைப்பதைக் கண்டு, அதைவிட பெரியது என்று தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது.

அனைத்து நினைவுகளுக்கும் மனமே காரணம். நாம் ஏற்கனவே அறிந்து கொண்டதுபோன்று, விழிப்பு நிலை, கனவு நிலை ஆகிய இரண்டுமே, நம் மனதின், எண்ணங்களின் விருத்தியே.

நாம் காணும் கனவுகளுக்கு ஏதேனும் அர்த்தங்களோ, பின் விளைவுகளோ, பலன்களோ இருக்கின்றதா எனப் பார்த்தால், ஒன்றுமில்லை என்றே தெரிகின்றது.

கனவில் நாம் காணும் உலகங்கள் யாவற்றையும், மனமே படைக்கின்றது. கனவு காணும் போது, அந்த உலகமும், அதில் வரும் உருவங்களும், அதில் நிகழும் நிகழ்ச்சிகளும், நமக்கு நிஜம் போலவே இருக்கின்றன.

விழித்து எழுந்ததுமே, அவை ஏதும் நிஜமல்ல எனத் தெளிவாகின்றது. (கனவு காணும் தருணத்தில்,

அது கனவு என நாம் அறிவதில்லை. விழித்து, புற உலகை அறிந்தவுடன், அதுவரை நாம் கண்டதெல்லாம் கனவு என அறிகின்றோம்).

இதைப் போலவே, விழிப்பு நிலையில் நாம் காணும் உலகக்காட்சிகள் அனைத்துமே மனதாலேயே தோற்றுவிக்கப்படுகின்றது. இவைகள் யாவும் மனதின் விருத்திகளே ஆகும்.

கனவு நிலை அனுபவங்களை, கனவு கலைந்து விழித்தவுடன் மற்றவர்களிடம் பகிர்ந்துக் கொள்வதைப் போன்று, விழிப்பு நிலை அனுபவங்களை மரணத்திற்கு பிறகு யாருடனும் பகிர்ந்துக் கொள்ள முடியாது.

ஆனால், மனம் தன்னுடைய விழிப்பு நிலை அனுபவங்களின் பதிவுகளுக்கு ஏற்ப சேகரித்துக் கொண்ட ஆகாமிய கர்மாவை, கொண்டு சென்று, சஞ்சித கர்மாவுடன் இணைத்துக் கொண்டு, ஏற்கனவே, அதில் சேகரிக்கப்பட்ட ஒட்டு மொத்த சம்ஸ்காரங்களுக்கு ஏற்ப, அவைகளில் இருந்து சிறிது மட்டும் பிராரப்த கர்மாவாக எடுத்துக்கொண்டு, அவைகளை அனுபவிக்கும் பொருட்டு, அதற்குத்தக்க உடலை மீண்டும் தேர்ந்தெடுத்து பிறவிக்கு வருகின்றது.

இது **'மனம் செய்யும் செயல்'** என்பதை ஒருவன் இந்த மனதைக்கொண்டு, புத்தியினால் விசாரித்து அறிய வேண்டும்.

மனமானது சங்கல்பங்கள் மற்றும் விகல்பங்கள் ஆகியவைகளின் தன்மையாகும்.

இதில், சங்கல்பம் எனில் எண்ணுதல், சிந்தித்தல் எனப்படும். விகல்பம் எனில் சந்தேகப்படுதல், ஐயப்படுதல் எனப்படும்.

அந்தகரணத்தின் மாறுதல்கள் ஒரு விசயத்தைக் குறித்து, அல்லது ஒரு செயலைக் குறித்து, சிந்திப்பதும், சந்தேகப்படுவதும் எழும் போது அதனை **“மனம்”** என்று அழைக்கின்றோம்.

இவ்வாறு, இந்த மனதின் விருத்திகளை விழிப்பு, கனவு, மற்றும் ஆழ்ந்த உறக்கம் என்ற மூன்று அவஸ்தைகளில், நாம் மூன்று உடல்களின் வாயிலாக அனுபவிக்கின்றோம்.

அதாவது, ஜீவர்களின் உடல்களை சாஸ்திரம் மூன்று விதங்களில் விவரிக்கின்றது. அவைகள், **‘ஸ்தூல உடல்’**, **‘சூக்ஷும உடல்’**, **‘காரண உடல்’** என்பனவாகும்.

<u>ஸ்தூல உடல்</u>

மனிதனின் ஸ்தூல உடல் ஆகாயம், வாயு, அக்கினி, நீர், பூமி எனும் பஞ்சபூதங்களால் ஆனது. இந்த பரு உடலானது ஆறுவிதமான மாற்றங்களுக்கு உட்பட்டது. அவைகள்,

1. கருவில் இடம் பெறுதல் (அஸ்தி),
2. பிறத்தல் (ஜாயதே),
3. வளர்தல் (வர்ததே),
4. இளமை, வாலிபம், முதுமை போன்ற மாறுபாடுகளுக்கு உட்படுதல் (விபரிணமதே),

5. மூப்பின் காரணமாக தளர்ச்சி அடைதல் (அபச்சியதே),
6. இறுதியில் மரணமடைதல் (நாசம்).

எனும் ஆறு மாற்றங்களுக்கு (ஷட் விகாரம்) இந்த ஸ்தூல உடல் உள்ளாகின்றது.

சூக்ஷும உடல்

மனிதனின் சூக்ஷும உடல், கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐந்து ஞானேந்திரியங்கள், வாய், கை, கால், குதம், குறி ஆகிய ஐந்து கர்மேந்திரியங்கள், பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் ஆகிய ஐந்து பிராணன்கள் மற்றும், மனம் ஆகிய 16 நுண் உடல்களைக் கொண்டது. இந்த சூக்ஷும உடல் பிரளய காலம் வரை வாழ்நாள் கொண்டது.

காரண உடல்

இவ்விரண்டு உடல்களுடன் ஜீவனுக்கு காரண உடலும் (காரண சரீரம்) உண்டு.

இவ்வுடல் தனி உடல் அல்ல.

ஸ்தூல, சூக்ஷும உடல்கள் வெளிப்படும் முன் இருக்கின்ற விதை இந்த காரண உடல் எனலாம். எவ்வாறு, ஒரு விதை, மரமாக வெளிப்படுகிறதோ அவ்வாறே காரண உடல், சூக்ஷும உடலாகவும், ஸ்தூல உடலாகவும் வெளிப்படுகிறது.

பிரளய காலத்தில் சூக்ஷும உடலும், ஸ்தூல உடலும் காரண உடலுடன் ஒடுங்கிவிடுகின்றன.

ஸ்தூல உடல் - விழிப்பு - பரு உடல்
சூக்ஷும உடல் - கனவு - மனம்
காரண உடல் - ஆழ்ந்த உறக்கம் - அறியாமை.

இதில், இதுவரை இந்த விழிப்பு நிலையில், நம்முடைய பௌதீகமான ஸ்தூல உடலினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதையாக மாறி, வெளிப்படாமல் (அவ்யக்தமாக) ஒரு இடத்தில் ஒடுங்கு கின்றன. அவைகள் ஒடுங்கும் இடமே **“காரண உடல்”** எனப்படுகின்றது.

அதுபோன்றே, கனவு நிலையில் (மனதினால்) சூக்ஷ்ம உடலினால், நாம் பெற்ற அனுபவங்கள் யாவும் ஒரு விதைப் போன்று, வெளிப்படாமல் ஒடுங்குகின்றன. இவ்வாறு, இவைகள் ஒடுங்கும் இடமும் அதே **“காரண உடல்”** எனலாம்.

நாம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு வரும் போது, நாம் காரண உடலை விடுத்து, ஸ்தூல உடலை அபிமானிக்கின்றோம்.

இதுவரை, காரண உடலில் வெளிப்படாமல், விதைகளாக ஒடுங்கியிருந்த அனுபவங்கள் யாவும், விழிப்பு நிலையில் ஸ்தூல உடலின் வாயிலாக வெளிப்படுகின்றன.

அவ்வாறே, நாம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து கனவு நிலையை அடையும் போது, காரண உடலை விடுத்து, சூக்ஷும உடலான மனதை அபிமானிக் கின்றோம்.

இவ்வாறு, கனவிலும், நனவிலும் உண்டாகும் அனுபவங்கள் யாவும், ஏற்கனவே காரண உடலில் விதைகளாக ஒடுங்கி இருந்தவைகளே ஆகும்.

இது எப்படி எனில், ஒரு கடுகு அளவுள்ள சிறிய விதைக்குள் மிகப்பெரிய மரம் ஒடுங்கி, ஒளிந்துக் கொண்டிருப்பது போன்று, காரண உடலில் இந்த மனதின் சம்ஸ்காரங்கள் அனைத்தும் ஒடுங்கியுள்ளது.

இதனாலேயே, உறக்கத்திலிருந்து விழித்தவுடன், உறங்குவதற்கு முன் நின்ற நினைவுகள் யாவும், மீண்டும் விட்ட இடத்திலிருந்தே தொடர்கின்றன. பல

நேரங்களில், கனவு அனுபவங்கள் விழித்த பின்னும், நினைவில் இருக்கின்றன.

நாம், எப்பொழுதெல்லாம், காரண சரீரத்துடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றோமோ, அப்பொழுது எல்லாம், எவ்வித புற அனுபவமும் இன்றி, ஏதும் அறியாத நிலையில் (ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல) இருக்கின்றோம்.

இந்த நிலை **'அறியாமை நிலை'** அல்லது **'அவித்யை நிலை'** எனப்படும்.

ஏன் இதை அறியாமை நிலை என்று கூறப்படுகின்றது என்றால், அங்கு **'நான் யார்?'** என்று தன்னை அறியக்கூடிய **'அறிவை'** நாம் உணர்வதில்லை. காரணம், அங்கு மனம், புத்தி இல்லை.

ஆழ்ந்த உறக்கத்தில் அடைந்த ஆனந்த அனுபவத்தை, நாம் விழிப்பு நிலையில் மனதையும், புத்தியையும் கொண்டு மட்டுமே அறிகின்றோம்.

ஆக மனமும், புத்தியும் இல்லாவிட்டால், அங்கு ஆனந்தம் இருந்தும், அதை அனுபவப்பட முடியாமல் இருப்பதை அறிகின்றோம்.

இவ்வாறு, உண்டாகும் ஆனந்தம் நமக்கு அனுபவப்பட வேண்டுமானால், மனம் என்ற அந்தக்கரணம் அவசியம் என்று இருக்கும்பொழுது, பிறகு ஏன் பரம புருஷர்கள் மனதை இறக்க வேண்டும், அல்லது இல்லாமல் செய்ய வேண்டும் என்றும்,

மனமற்ற நிர்விகல்ப நிலை உண்டாக வேண்டும் என்றும் பலவாறாக உபதேசிக்கின்றார்கள்?

மனம் என்பது ஆத்மாவில் இருந்து வேறுபட்டதல்ல என்பதினால், அதன் அதீத வளர்ச்சியினால் உண்டான விழிப்புற்ற புத்தி சக்தியைக் கொண்டு, அது தன்னை அறிந்து, தன் தனித்துவத்தை முற்றிலுமாக இழந்து, தன்னுடைய இயல்பான சொரூபத்தில் ஆ(பரமா)த்மாவில் கரைந்து விடுகின்ற அதிசூக்ஷுமத்தை அறிய வேண்டும் என்பதினால் இவ்வாறு மனம் இறக்கவேண்டும், மனமற்ற நிலை வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

பொதுவாக, மனம் இரண்டு விதமாகவே செயல்பட்டு, இரண்டு விதமான அனுபவங்களுக்கு உட்படுகின்றது.

அவைகள், உயர்வு - தாழ்வு, நல்லது - கெட்டது, இன்பம் - துன்பம், பிறப்பு - இறப்பு, பயம் - தைரியம், பாவம் - புண்ணியம், இருள் - வெளிச்சம் ஏழை - பணக்காரன், நோய் - ஆரோக்கியம், வெண்மை - கருமை, சூடு - குளிர்ச்சி, ஆண் - பெண், ஆஸ்திகன் - நாஸ்திகன், என்று எட்டாத உயரத்திற்கு அடுக்கிக் கொண்டே போகக்கூடிய பல்வேறு இருமைகளை கற்பித்துக் கொண்டுள்ளது இந்த மனம்.

அதன் அடிப்படையிலேயே இந்த மனமானது எதை தேடினாலும், அந்த தேடுதலில் இரண்டுவிதம் இருக்கும். ஒன்று இந்த உலகப்பொருளிடம் இன்பத்தை தேடி ஓடுவது. அல்லது, பரம்பொருளிடம் இன்பத்தை தேடி ஓடுவது.

இந்த இரு நிலைகளுக்கும் மனம் மாறி, மாறி இருந்துக் கொண்டுதான் இருக்கும். அது மனதின் இயல்பு என்றாலும், இயற்கையின் நியதியும் அவ்வாறே அமைக்கப்பட்டுள்ளது.

அது எவ்வாறு எனில், ‘ஆக்கம் என்று ஒன்று இருந்தால் அழிவு என்ற ஒன்றும் நிச்சயம் இருந்தாக வேண்டும். இதுவே, படைப்பின் நியதி. இந்த இருமை நியதிக்கு படைக்கப்பட்ட மனமும் விதி விலக்கல்ல.’

உதாரணமாக, ஒரு அணுவின் இயக்கத்திற்கு புரோட்டான் என்ற ஒரு நேர்மறை(+ve) மூலக்கூறும், எலக்ட்ரான் என்ற ஒரு எதிர்மறை(-ve) மூலக்கூறும் ஒன்றை ஒன்று ஈர்த்துக்கொண்டு, அதன் நிலையான இயக்கத்திற்கு காரணமாக அமைகின்றது.

அதுப்போன்றே, நேர்மறை(+ve) மற்றும் எதிர்மறை(-ve) கொண்ட இரண்டு இணைப்புகளும் (Terminals) இருந்தால்தான் மின்கலன் (Battery) செயல்படுகின்றது.

இவ்வாறே, ஏற்றத்தாழ்வுகள் என்ற இருமைகள் இருந்தால்தான் இந்த உலகமும் செயல்படும்.

ஏனெனில், இல்லாத உலகம் இந்த இருமைகளினால்தான் இருக்கின்றது.

"இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு." - திருக்குறள்.

இருமைகளை ஆராய்ந்து, அதன் நியதியை (தர்மத்தை) அப்படியே ஏற்றுக் கொண்டவர்களின் பெருமையால் இந்த உலகம் விளங்குகின்றது. என்பது இந்த குறளின் கருத்து.

ஆகவே, **"இருமைகளைக் கொண்ட மனம் இருக்கின்றவரை, இந்த உலகம் இருக்கும்."**

மனம் இருமைகளைக் கொண்டதினால்தான் ஒன்றேயான சிவத்திடம் இருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டு சீவன் என்று இறைவனை இருமைப்படுத்திக் கொள்கின்றது.

இந்த சீவன் அறியாமையினால் தன் உண்மை சொரூபத்தை மறந்து, ஆத்மாவின் மீது, அனேக சீவ உபாதிகளை ஏற்றிவைத்துக் கொள்கின்றது.

(உபாதி என்பது ஒன்றின் மீது மற்றொன்றை ஏற்றி வைத்தல் என்பதாகும். உதாரணம் கண்ணாடி போன்று கலங்கமில்லாத ஸ்படிகத்தின் அருகே வைக்கப்பட்ட ரோஜா மலரின் சிவந்த நிறம் அந்த

ஸ்படிகத்தின் மீது ஏற்றி வைக்கப்பட்டு, பார்பதற்கு அந்த ஸ்படிகம் சிவந்த நிறத்தில் காணப்படும்.

அதுபோன்று, கலங்கமற்ற பரம்பொருளான ஆ(பரமா)த்மா - வின் மீது மனம் என்பதை ஏற்றி வைத்துக்கொண்டு, அதன் இருமைகள் அனைத்தும் ஆத்மாவாகிய தன்னிடம் இருப்பதாக கருதிக்கொண்டு, சீவன் தன்னை அறியாமல் இருக்கின்றது.)

உதாரணமாக, ‘நீர்’ என்பது ஒன்றுதான். அதாவது, ஐம்பெரும் பூங்களில் ஒன்று.

அதுவே, கடல் நீர், நிலத்தடி நீர், குளத்து நீர், கிணற்று நீர், ஆற்று நீர், சேற்று நீர், மழை நீர், ஓடை நீர், அருவி நீர் என பலவாறாக, இடத்திற்கு ஏற்பப் பெயர் பெறுகின்றது. இந்த நீர்நிலைகளில் எல்லாம் அது தன் இயல்பான திரவ நிலையில் உள்ளது.

பின்பு அதுவே காற்றுப் போன்று, பலவாறாக இருப்பதும் உண்டு. நீர் ஆவி, நிறமில்லாத ஆவி, வெண்மேகம், செம்மேகம், கார்மேகம், மூடுபனி, நீர்ப்பணி ஆகிய பல வடிவங்களில் காணப்படுகின்றது.

மேலும், அது கடும் குளிரால் கடினபதார்த்தமாக மாறிவிடுவதும் உண்டு. அவைகள், உறைபனி, ஆலங்கட்டி, ஐஸ்கட்டி என்ற நிலையில் பலவாறாக வடிவம் பெறுகின்றது.

இத்தனை விதமான வடிவங்களும், அதன் நிலைகளும் ஒன்றேயான நீரின் உபாதிகளாகும்.

இத்தனை வேறுபாடுகளுக்கிடையில் நீர் தனது உண்மையான நீர்மையை இழப்பதில்லை.

கங்கை நீர் என்பது நீரின் ஒரு மேலான உபாதி என்றால், சாக்கடை நீர் என்பது அதன் கீழான உபாதி எனலாம்.

கீழ்நிலையை முன்னிட்டு, சாக்கடை நீரை இழிவானது எனல் ஆகாது. ஏனென்றால், அதன் கீழ்நிலையும் தேவையானதே.

இதுபோன்று, நீரின் உபாதிக்கு நிகரானது சீவாத்மாவின் உபாதி.

இந்த சீவன் கல்லாகவும், புல்லாகவும், புழு, பூச்சியாகவும், பல்லி, பாம்பாகவும், பறவையாகவும், விலங்காகவும், மனிதனாகவும் என பல்வேறு சீவ உபாதிகளில் உருவெடுக்கின்றது.

நீர் எப்படி ஒரே சமயத்தில் நீராவியாகவும், உறைபனியாகவும் இருப்பதில்லையோ, அதுபோன்றே, சீவனும், ஒரே சமயத்தில் கல்லாகவும், புல்லாகவும் இருப்பதில்லை.

இந்த உபாதிகள் மாறி, மாறி அமையக்கூடிய தன்மை கொண்டது என்பதை நாம் நாள்தோறும் கனவு காணும்பொழுது, கண்டுகொள்கின்றோம். ஆகவே, கனவே நமக்கு உண்மையை அறிய நிதர்சனமான அனுபவம் எனலாம்.

இது எவ்வாறு எனில், கனவு காண்கின்ற மனம், கனவில் பல்வேறு உபாதிகளில் உடல் எடுத்துக் கொண்டு, அத்தனை உடல்களையும் தன்னில் தானாய் இருந்துக்கொண்டு அனுபவிக்கின்றது.

அதாவது, ஒரு உலகை படைத்து, அந்த உலகத்தில் பல்வேறு உடல்களைப் படைத்து, அதில் ஒரு புலி துறத்துவது போன்றும், அந்த புலிக்கு பயந்துக்கொண்டு இவன் ஓடிவருவது போன்றும் ஒரே மனம் பலவாக கனவு நிலையில் பரிணமிக்கின்றது.

இதையே, நம்முடைய விழிப்பு நிலை அனுபவத்திலும் மனம் இவ்வாறு இந்த உலகத்தை படைத்துக் கொண்டு, அதில் பல்வேறு தரப்பட்ட மக்களையும், மிருகங்களையும், பறவைகளையும், ஜடப்பொருட்களையும் என உபாதிகளை உற்பத்தி செய்து கொண்டே இருக்கின்றது.

இதே மனம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் பொழுது விலங்கு, பறவை, மனிதன், ஜடப்பொருட்கள் என அனைத்திலும் எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றி, ஒன்றாக மாறி, தன் இயல்பான சொரூபத்தில் காரண உடலில் ஒடுங்கி விடுகின்றது.

எப்பொழுதெல்லாம் மனம் காரண உடலை விட்டு, (தன் சொரூபத்தை விட்டு) வெளிக் கிளம்புகின்றதோ, அப்பொழுதெல்லாம் தனக்கு வேறாக பல்வேறு உபாதிகளை (உடல்களை) படைத்துக் கொண்டு பல்வேறு வேறுபாடுகளை கற்பித்துக் கொள்கின்றது.

இந்த கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல உடலுக்கும், இந்த ஸ்தூல உடலைக் கொண்டு செயல் செய்கின்ற புற, அகக்கரணங்களுக்கு ஆதாரமான கண்ணிற்குத் தெரியாத சூக்ஷும உடலுக்கும், காரணமாக இருக்கின்ற **'காரண உடலே'** மனதின் இருப்பிடம் ஆகும்.

அதாவது, ஒருவன் இங்கும், அங்கும் ஆடி, ஓடி பலகாரியங்களைச் செய்து களைப்பின் மிகுதியால், தன் இருப்பிடமான வீட்டிற்கு வந்து சேர்ந்து, 'அப்பாடா' என்று ஓய்வு எடுக்கும் பொழுதுதான் ஆனந்தத்தை உணர்கின்றான். ஆனால், அந்த ஆனந்தம் அவனுக்கு தற்காலிகமானதே.

ஜீவர்கள் தினமும் எப்படி பகல் பொழுதில் பலவாறு இங்கும், அங்கும் உணவுக்காக சுற்றி அலைந்து விட்டு, இறுதியில் தங்களுக்கு என்று ஏற்படுத்திக்கொண்ட இருப்பிடங்களான வீடுகளுக்கும், கூடுகளுக்கும் இரவில் வந்து ஒடுங்குகின்றனவோ அதுப்போன்று, இந்த மனமும் பலவாறு எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டு, களைப்பின் காரணமாக தன் இருப்பிடமான காரண உடலுக்கு தினந்தோறும் ஆழ்ந்த உறக்கத்தில் தாமஸ குணத்தில் வந்து ஒடுங்குகின்றது.

இவ்வாறு, மனம் வெளிப்பட முடியாமல் விதை வடிவில் ஒடுங்கி இருக்கும்வரை மட்டுமே சிறிது ஆனந்தம் நிலைக்கின்றது.

அவ்வாறு, ஆழ்ந்த உறக்கத்தில் மனம் ஒடுங்கும் பொழுது உண்டாகும் ஆனந்தத்தை அப்பொழுதே அனுபவப்படுவதற்கு முடியாமல்

இருக்கக் காரணம், அதே காரண உடலில் மனம் சேகரித்துக் வைத்துக்கொண்டுள்ள சம்ஸ்காரங்களான பாவம் - புண்ணியம் என்ற பல்வேறு இருமைகளினால் சூழப்பட்டு இருப்பதினால், அங்கு **'சித் சக்தி'** (தன்னை அறியும் அறிவு) பிரகாசிப்பதில்லை.

அதுவே, மனம் விழித்தவுடன் விழிப்பு நிலை அனுபவத்தில் சத்வ குணத்திற்கு வந்து, உறக்கத்தில் உண்டான ஆனந்தத்தை இங்கு உணர்வதற்கு காரணம் மனதுடன் புத்தி சக்தியும் சேர்ந்து உள்ளது.

காரண உடலில் தாமஸ குணத்தில் மனம் ஒடுங்கும் பொழுது, வந்து, போகின்ற ஆனந்த அனுபவம், விழிப்பு நிலையில் ராஜஸ குணத்தில் மனம் ஒடுங்கும் பொழுது வந்து போகின்றது.

அது எவ்வாறு எனில், விழிப்பு நிலையில் நாம் நம் கண்கள் என்ற புலன்களைக் கொண்டு ஒரு பொருளை பார்த்து, அதன் மீது மனதினால் ஆசை கொண்டு, அதை அடைய வேண்டும் என்று விரும்புகின்றோம். அதை அடைய வேண்டும் என்ற ஆசையே சிறிது ஆனந்தத்தை உண்டாக்குகின்றது

அதுவே, ஆசைப்பட்ட அந்தப் பொருளை நாம் அடைந்து விட்டாலோ, மனம் இன்னும் பூரித்து கூடுதலான ஆனந்தத்தை அடைகின்றது.

அடுத்து, அடைந்த அந்தப்பொருளை நாம் அனுபவிக்கும் பொழுது, மனதில் உண்டாகின்ற ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. அது ஒன்றே மனதை முழுமையான திருப்தி நிலைக்கு கொண்டு

சென்று விடுகின்றது. ஆனால், இந்த திருப்தி என்பது மனதிற்கு அடுத்த ஆசையை உண்டாக்கக்கூடிய எண்ணங்கள் தோன்றாமல் இருக்கும் வரை மட்டுமே.

இதுபோன்ற அனந்தம் உண்டாகும் பொழுது எல்லாம், மனம் காரண உடலை அபிமானித்து இருக்கின்றது. ஆனால், வருகின்ற ஆனந்தம் சிறிது நேரத்திலேயே நீர்த்து விடுகின்றது. மனம் மீண்டும் மற்றொன்றின் மீது ஆசைப்படுகின்றது. இது மனதின் தொடர் நிகழ்வாக காணப்படுகின்றது.

இவ்வாறு, உறக்கத்தில் அடையும் ஆனந்தத்தை, விழிப்பு நிலையில் மனம் புத்தி சக்தியின் வாயிலாக அறிந்துக் கொண்டாலும், அந்த ஆனந்தம் நிலையாக நீடிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம், விழிப்பு நிலை அனுபவங்கள் ராஜஸ குணத்தை பிரதானமாக கொண்டுள்ளதால், அந்த குணத்திற்கு ஏற்ப, மனம் நிலைகொள்ளாமல் காரண உடலுடன் முழுமையாக ஒடுங்க மறுக்கின்றது.

மனம் முழுமையாக காரண உடலில் ஆழ்ந்த உறக்கத்தில் தாமஸ குணத்தில் ஒடுங்குவது போன்று, விழிப்பு நிலையில் சத்வ குணத்திலும் மனம் இருமைகளற்று, எந்த எண்ணங்களும் இன்றி, யோகத்தில் ஈடுபட்டு, அந்த ஏக இறைவனை பக்தி செய்து அவனுடன் இரண்டறக் கலக்கும் பொழுதும், அல்லது, போகத்தில் ஈடுபட்டு, தன் மனைவியுடன் உடல், மனம் என்ற இருமைகளற்று இரண்டறக் கலக்கும் பொழுதும் மனம் ஒடுங்குகின்றது.

ஆனால், இந்த இரண்டு விதமான ஆனந்தமும் நிலையாக நீடிக்காததற்குக் காரணம் மனம் காரண உடலில் ஒடுங்குவதினால்தான்.

இதிலிருந்து, மனம் இருமைகள் இன்றி ஒரே முனைப்பாக எதை நோக்கி ஒடுங்குகின்றதோ, அப்பொழுது, அங்கே ஒருமை நிலை உண்டாகி, தன் சொரூபத்தில் நிற்கின்றது. அப்பொழுது, முழுமையான திருப்தியை, ஆனந்தமாக சற்று நேரம் அடைகின்றது என்பதை அறிய முடிகின்றது.

மனம் தன் சுய சொரூமான ஆ(பரமா)த்மாவை எப்பொழுது உணர்கின்றதோ, அப்பொழுது எல்லாம் ஆனந்தம் உண்டாகின்றது.

பிறகு ஏன்? மனம் ஆத்மாவை உணராமல், காரண உடலை அபிமானிக்கின்றது என்றால், அந்த மனதின் பல்வேறு சேகரிப்பினால் உண்டான சம்ஸ்காரங்கள் அனைத்தும் அந்த காரண உடலில் கொண்டுள்ளதால், தன் இருப்பிடமான காரண உடலுக்கு சென்று ஒடுங்குகின்றது.

காரண உடல் என்பது, ஸ்தூல, சூக்ஷும உடல்களினால் சேகரிக்கப்பட்ட அனுபவங்களான பல்வேறு சம்ஸ்காரங்களின் ஒட்டு மொத்த தொகுப்பு. இத்துடன், இருமைகளால் சூழப்பட்ட, பல்வேறு பிறவிகளாக சேகரிக்கப்பட்ட சஞ்சித கர்மம் என்ற புண்ணிய - பாவங்களை கொண்ட ஒரு சேமிப்புக் கிடங்கு.

உண்மையில், காரண உடலில் நடப்பது என்ன? என்று ஆராய்ந்தால், மனம் விதையாக காரண உடலில் ஒடுங்கும் பொழுது, அதன் சுயப்பிரகாச சொரூபமாகிய ஆத்மா வெளிப்படுகின்றது.

ஆகவே, மனம் ஆத்மாவுடன் ஒன்றாகி ஒடுங்கும் போது மட்டுமே ஆனந்தம் உண்டாகின்றது. அது தன் பழைய நிலையான விதை வடிவத்தில் தற்காலிகமாக காரண உடலில் ஒடுங்குகின்றதே தவிர, அங்கு மனம் முழுவதுமாக ஆத்மாவில் அடைக்கலம் ஆகவில்லை.

மேலும், மனதின் அத்தனை இருமைகளும் புண்ணிய - பாவங்களாக புதைந்துக்கொண்டுள்ள ஒரே இடம் இந்த காரண உடல் என்பதினால், இந்த காரண உடல் அழியாமல், சூக்ஷும உடலான மனமும் அழியாது.

மனம் அழியாமல் இருந்தால், அது மீண்டும், மீண்டும் உடல் எடுத்துக் கொண்டு பிறவிக்கு வருவதை தடுக்கவே இயலாது.

இந்த காரண உடல் அழியும் பொழுதுதான், மற்ற இரண்டு உடல்களான சூக்ஷும உடல் (மனம்), ஸ்தூல உடல் (பூத உடல்) இரண்டும் உண்டாகாமல் தடுக்கப்படுகின்றது.

அதுவரை இந்த மனம் மீண்டும், மீண்டும் தன்னிடம் சேகரித்து வைத்துள்ள சம்ஸ்காரங்களுக்கு ஏற்ப உடல்களை எடுத்துக்கொண்டே இருக்கும். பல பிறவிகளுக்கு வந்து, போய்க்கொண்டே இருக்கும்.

பிறப்பு - இறப்பு என்ற சுழற்சக்கரத்தை நிறுத்த வேண்டும் என்றால், இந்த மனதை விசாரித்து, தன் சுய சொரூபத்தை அறிந்து, அந்த ஆ(பரமா)த்மாவில் இரண்டறக் கரைந்து விடவேண்டும். அதாவது, உப்புக்கட்டி கடல் நீரில் கரைந்து விடுவது போன்று ஒன்றாக கரைந்து விட வேண்டும். இதைத்தவிர வேறு வழியே இந்த மனதிற்கு கிடையாது.

ஆகவே, மனதைக் கொண்ட சீவர்களில் மனிதனுக்கு மட்டுமே இது சாத்தியம். மற்ற சீவர்களுக்கு இதுவும் சாத்தியமல்ல. காரணம், உயர் பிறப்பான மனிதனே தனக்கு கொடுக்கப்பட்ட புத்தி சக்தியினால் **‘அறிவை அறிவினால் விசாரித்து’** ஆ(பரமா)த்மாவை அறிய முடியும்.

ஆதலால், இந்த மனம் இத்தகைய அரிதான மனித உடலை எடுக்கும் பொழுதே, இந்த சந்தர்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனதை சரியாகக் கையாளும் பக்குவிகளும், மனதை செம்மை செய்கின்ற செயற்கரிய செயலைச் செய்பவர்களுமாகிய, அனேக மகா புருஷர்களில் நாமும் ஒருவராக நிச்சயம் இருக்க வேண்டும்.

அதுவே, நமக்கு கிடைத்த அரிதிலும், அரிதான மனிதப்பிறவியின் பயன் என்னவெனில், நம் உண்மையான சொந்த வீட்டிற்கு (வீடுபேறு) நாம் சென்று, நிலையான ஆனந்தத்தை அடைவது ஒன்றே ஆகும்.

இதுவே, சனதான தர்மம் வகுத்துள்ள "**அறம், பொருள், இன்பம், வீடு**" என்ற மனிதனுக்கு மட்டுமே உண்டான வாழ்வியல் வழிமுறையாகும்.

மனதை செம்மை செய்வது என்பது, அந்த செம்பொருளை எப்பொழுதும் சிந்தித்தவாறு அன்பு (பக்தி) செய்வதாகும். அதாவது, மனதால் அந்த மெய்ப்பொருளை விசாரித்து, அதனிடம் முழுமையாக சரணடைந்து, மனதை ஒப்படைப்பது ஆகும்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு. - திருக்குறள்.

பிறப்பு என்ற (மனதின்) அறியாமை நீங்க வேண்டுமென்றால், சிறப்பான மெய்ப்பொருளை கண்டு

கொள்வதே அறிவு. என்று வள்ளுவப்பெருமானார் அறிவுறுத்துகின்றார்.

அதுப்போலவே, மனமற்ற நிலை என்பதுவும், மனம் இறந்த நிலை என்பதுவும், மனதைக் கொண்டு விசாரித்து, புத்தியினாலே அந்த மெய்ப்பொருளை அறிந்து, அதற்கு வேறாக எப்பொருளும் இல்லை, அந்த மெய்ப்பொருள் ஒன்றே அனைத்திற்கும் எல்லை என்பதை உணர வேண்டும்.

இதை அறிந்து கொண்டு, இந்த உடலுடன் வாழும்பொழுதே அதனுடன் இரண்டறக் கலந்து, ஒன்றாகி விடுவதே **'ஜீவன் முக்தி'** என்றும், **'ஞானம்'** (விவேகம்) என்றும் அழைக்கப்படுகின்றது.

இதிலும், நம்முடைய மனம் உடனடியாக அது பக்தி, இது ஞானம் என்று அறியாமையினால் வேற்றுமைகளை உண்டாக்கிக்கொண்டு இருமைகளை தோற்றுவித்துக் கொள்ள முயற்சிக்கும்.

ஆகவே, இருமைகள் அகன்று, இறைவனுடன் இரண்டறக் கலந்து, ஒன்றென அறியும் மனமே, உண்மையில் மெய்ப்பொருளை (அறிவை) உணர்ந்த மனம் எனப்படுகின்றது.

அந்த மனமே தன் உண்மை சொரூபத்தை அறிந்து ஆ(பரமா)த்மாவில் நிலை பெறுகின்றது. அந்த நிலையில் மட்டுமே நிலையான ஆனந்தம் எப்பொழுதும் நிலைத்திருக்கின்றது.

ஏனெனில், இனி மனம் என்று ஒன்று தனியாக இல்லை, **‘இருப்பதெல்லாம் இறைவனே’** ஆகும்.

பொதுவாக, மனமற்ற நிலை என்பது முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டது. அங்கு, கால, தேச, வர்த்தமானம் கிடையாது. அந்நிலையில் மனம் என்ற மாயை மாண்டு விடுகின்றது.

அதாவது, கடலை ஆழம்பார்க்கச் சென்ற உப்பு பொம்மை, அந்த கடல் நீரிலேயே கரைந்து விடுவது போன்று, சீவன் தன் வடிவத்தை இழந்து சிவம் என ஒன்றாகி விடுகின்றது.

இதுபோன்று, மனம் அந்த இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட்டால், அதற்கு தனியாக இருப்பு என்று இல்லாமல் போய் விடுகின்றது.

அதாவது, மனம் எப்பொழுது ஆத்மாவாகிய ‘**தன்மை**’யிடம் தஞ்சம் புகுந்து விடுகின்றதோ, அதன்பிறகு அங்கு அதற்கு என்று ஒரு தனித்துவம் இல்லை. ஆதாலால், அது தன் உண்மை நிலையான தன் சொரூபத்தில் இருப்பு கொள்கின்றது.

அதுவே அதன் உண்மை நிலை. இருப்பு நிலை. அதனால், அங்கு அந்த மனதிற்கு தனக்கு வேறாக **‘முன்னிலை’**, **‘படர்க்கை’** உண்டாவதில்லை.

(தன்மை - நான்
முன்னிலை - நீ
படர்க்கை - அவன், அவள், அது.)

இந்த மனம் எப்பொழுது ஆத்மாவான **"நான்"** என்ற தன் சொரூபத்துடன் தஞ்சம் புகுந்து தன்னை அறிந்து கொள்கின்றதோ, அப்பொழுதே, **"நான்"** என்று இதுவரை நினைத்துக் கொண்டிருந்த தன் அஹங்காரத்தை உண்மையான **"நான்"** அல்ல என்று, விட்டு விடுகின்றது.

ஆத்மாவாகிய **"நான்"** என்று தன்னை அறிந்து கொண்டு, தன் ஸ்வரூபமான ஆத்மாவாகவே மாறிவிடுகின்றது. இதனால், மனம் தன் தனிப்பட்ட இருப்பு இன்றி, இறந்து போய் விடுகின்றது.

இனி தன் ஸ்வரூபத்தில் இருந்து கொண்டு எப்பொழுதும் பிரகாசிக்கத் தொடங்குகின்றது.

இதையே, '**ஆத்ம அனுபூதி**', '**ஆத்ம ஸ்வரூபம்**', '**ஆத்ம நிஷ்டை**' என்று பலவாறாக அழைக்கின்றோம்.

இதுவே, ஒவ்வொருவருக்கும் நிகழவேண்டிய உண்மையான நிகழ்வு. இதற்காகத்தான் இத்தனை விசாரங்களும், தவங்களும், சித்தசுத்தி பயிற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனையே, தாயுமானவர் தன் பாடலில் மிக அழகாக எடுத்துரைக்கின்றார்.

"சினம் இறக்க கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும்,
மனம் இறக்க கல்லாற்கு வாயேன் பராபரமே!"

- தாயுமானவர்.

இதையே, நாம் மனம் அற்ற நிலை, அல்லது மனம் இறந்த நிலை என்கின்றோம்.

மற்றபடி, மற்றவர்கள் நினைத்துக் கொண்டிருப்பது போன்று, மனதைக் கொல்வது அல்லது அழிப்பது என்பது சாத்தியம் இல்லை. எண்ணங்களே தோன்றாமல் ‘கோமா’ நிலையில் இருக்கவும் முடியாது.

எண்ணங்கள் அற்ற நிர்விகல்ப சமாதியில் சில காலம் இருக்கலாம் என்றாலும், சமாதி கலைந்து, விழிப்பு நிலைக்கு வந்தவுடன், மனதின் பழைய சம்ஸ்காரங்களுக்கு ஏற்ப, அதனுடன் சம்பந்தம் உண்டாகி, இந்த உலகம் மீண்டும் பழையபடி வந்து அப்படியே ஒட்டிக்கொள்கின்றது.

மேலும், எண்ணங்கள் இன்றியும், எதிலும் பற்று இன்றியும் மனம் இருக்க முடியாது. ஆனால், மனம் பற்ற வேண்டியதை பற்றினால், பற்று விட்டுப் போகும்.

இதையே, வள்ளுவப்பெருந்தகை கீழ்க்கண்ட குறட்பாவில்,

“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.”- திருக்குறள்.

யாதொரு பற்றும் இல்லாத இறைவனைப் பற்றிக் கொண்டால், இந்த மனம் பற்றினை விட்டு விலகுதற்கு ஏதுவாக இருக்கும் என்கின்றார்.

ஆகவே, மனம் என்ற கருவியைக் கொண்டு மகத்தான பரம்பொருளை மட்டுமே பற்ற வேண்டும்.

அற்பமான உலகப்பொருளை பற்றுவதை விட்டு விலக வேண்டும்.

அதனால், மனதை நன்றாக அறிந்துக் கொண்டவன், அந்த மனதைக் கொண்டு, அற்ப பொருள்களைப் பற்றாமல், பரம்பொருளை மட்டும் பற்றிக்கொண்டு, அதையே எப்பொழுதும் எண்ணிக் கொண்டு இருப்பதினால், அதனுடன் இரண்டறக் கலந்து விடுகின்றான்.

அவனே 'சீவன் முக்தன்'. அவன் இந்த உடலுடன் வாழும் பொழுதே இந்த உடல் பற்றுமின்றி இருக்கின்றான் அதனால், அவனே **'விதேக முக்தன்'** எனவும் அழைக்கப்படுகின்றான்.

உடலை விட்ட பிறகு அடைகின்ற விதேக முக்தியை விட, உடலுடன் இருக்கும் பொழுதே, அந்த உடலின் மீது அபிமானம் இன்றி வாழ்கின்றவனும் **"விதேக முக்தன்"** எனப்படுகின்றான்.

இனி அவனும், அந்த ஆ(பரமா)த்மாவும் வேறு, வேறு அல்ல. **'இருப்பதெல்லாம் இறை(அ)வனே. இருக்கின்றவனும் இறை(அ)வனே'.**

இவ்வாறு, உள்ளதை உள்ளபடி உணர்ந்துக் கொண்டவர்களுக்கே,

'உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானாற்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே.'

என்கின்றது திருமந்திரம்.

அதுவே, தெளிவற்றவர்கள் இந்த ஞானிக்கு முற்றிலும் விரோதமாக உலகப்பற்று கொண்டு, உலகப் பொருள்களை பற்றுகின்றபொழுது, மனம் எப்பொழுதும் இருமைகளில் சிக்கிக்கொண்டு, பாவ - புண்ணியங்களை உண்டாக்கிக் கொள்கின்றது.

மனதின் பல்வேறு அனுபவங்களினால் உண்டாகின்ற இருமைகளான நன்மை - தீமைகள், புண்ணிய - பாவங்களாக எவ்வாறு மாறுகின்றன என்பதை சாஸ்திரம் மூன்று கர்மங்களாக வகுத்து கொடுத்துள்ளது.

அவைகள், **'சஞ்சித கர்மா'**, **'பிராரப்த கர்மா'**, **'ஆகாமிய கர்மா'** எனப்படுகின்றது.

பல்வேறு பிறவிகளாக இருமைகளில் காரணமாக சேகரித்துக் கொண்ட ஒட்டு மொத்த பாவ - புண்ணியங்களின் தொகுப்பு **"சஞ்சித கர்மா"** எனப்படுகின்றது. இதுவே, காரண உடலில் சேகரிக்கப் பட்டுள்ளது.

ஸ்தூல உடலில் பிறவிக்கு வரும்பொழுது, அதிலிருந்து சிறிது கர்மவினைகளை மட்டும் எடுத்துக் கொண்டுவந்து, தற்பொழுது எடுத்துள்ள பூத உடலின் இறப்பு வரை, அனுபவித்து தீர்ப்பது **"பிராரப்த கர்மா"** எனப்படுகின்றது.

இவ்வாறு பூத உடல் எடுத்த பிறகு, மீண்டும் அந்த உடலைக் கொண்டு, இந்தப்பிறவியில் புதியதாக

உண்டாக்கிக் கொள்கின்ற பாவ - புண்ணியங்களை **“ஆகாமிய கர்மா”** என்று அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு, மனதின் பல்வேறு எண்ணங்களினால், விளைந்த நன்மை - தீமைகள், பாவ - புண்ணியங்கள் என்ற இருமைகளான விகல்பங்கள் (மனதினால் உண்டாகும் சந்தேகங்கள்), காலம், மற்றும் இடத்தை (Time & Space) ஆதாரமாகக் கொண்டே விளைகின்றது.

அதாவது, காலம் என்பதை நாம் நம் அனைவருக்கும் பொதுவானதான, வெளிப்புறத்தில் இருப்புடைய ஒரு விஷயமாகப் பார்க்கிறோம்.

உதாரணமாக, சென்னையில் இருந்து புறப்பட்ட ஒரு கார் தற்பொழுது கோவையில் இருக்கின்றது என்றால், இந்த பயணத்தின் இடையில் **‘காலம்’** கடந்து இருக்க வேண்டும்.

இது, நம்முடைய பார்வையில் பொருட்களின் அசைவுதான் **‘காலம்’** என்னும் உணர்வைத் தோற்றுவிக்கிறது.

ஒருவருடைய மரணத்தைக்கூட, அவரது உடலை அடிப்படையாகக் கொண்டே காலமாகி விட்டார் என்று நாம் அழைக்கின்றோம்.

அதாவது, அவருக்கு உடல் முன்பும் இல்லை, இனியும் இருக்கப்போவது இல்லை. இடையில் வந்த, உடலை காலமாகக் கருதப்படுகின்றது.

இதை நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். நாம்தான் அறிய மறுக்கின்றோம்.

உண்மையில், மனதின் அனுபவ வெளியில் (பிரக்ஞையில்), ஒரு எண்ணத்திற்கும் மற்றொரு எண்ணத்திற்கும் இடையில் நிகழ்வதே காலம்.

அதாவது, இரண்டு நிகழ்வுகளுக்கு இடையில் உள்ள இடைவெளிதான் **"காலம்"** எனப்படுகின்றது.

காலம் என்பது இயக்கத்தின் அளவீடு. அது அளக்கும் அல்லது அறியும் கருவியை (பொருளை) பொருத்தது எனலாம்.

அதாவது, வேறு வகையில் கூறுவதென்றால், ஒன்றுமே இல்லாத, ஒன்றுமே நடக்காத உலகில் **'காலம்'** என்ற ஒன்று இருக்காது.

காலம் என்பது வெளிப்புறமானது அல்ல என்னும் உண்மையை அறிந்து கொள்ளும் போதுதான் காலமற்ற பேருண்மையை அறிந்துக்கொள்ளும் சாத்தியமே உண்டாகின்றது.

நினைவுகளுக்கு மதிப்பளிக்கத் தொடங்கும் பொழுதுதான் காலம் உள்ளே வருகின்றது. தொடக்கம்-இருப்பு-முடிவு என்று இருக்கும் எதுவும் காலத்துக்கு உட்பட்டது.

'காலமென்னும் நதி' என்று காலத்துக்கு நதியின் ஓட்டத்தை உதாரணமாகக் கூறுகின்றார்கள்.

நதியின் ஓட்டத்தில் மூன்று காலங்களும் இணைகின்றன. கடந்து போன நீர் என்பது கடந்தது, இப்போது ஓடிக் கொண்டிருக்கின்ற நீர் என்பது இருப்பது, இனி, வரப்போகின்ற நீர் என்பது எதிர்ப்பார்ப்பது என இம் மூன்றையும், நாம் நீரில் தலை முழுகி எழுந்திருக்கும், அந்த ஒரு விநாடி நேரத்தில் அனுபவம் கொள்ள முடிவது நதியில்தான்.

அதாவது, நாம் ஓடுகின்ற நதி நீரில் குளிக்க மூழ்கும் பொழுது, அந்த விநாடியில் இனி வரப்போகின்ற நீரையும், முழுகும் போது வந்துவிட்ட நீரையும், முழுகிவிட்டு எழுவதற்குள் கடந்துபோன நீரையும் என எதிர்காலம், நிகழ்காலம், மற்றும் கடந்த காலம் என மூன்று காலங்களையும் ஒரு சேர ஒரு நொடியில் அனுபவிக்கின்றோம்.

அதுப்போன்றே, ஒரு விதை செடியாகி, மரமாகி, பூவாகி, காயாகி, கனியாகி, மீண்டும் விதையாகின்றது. இது ஒரு காலசுற்று.

அதுவே, ஒரு விதை மரம் ஆக மாற பல ஆண்டுகள் எடுத்துக் கொள்கின்றது. இதில் காலம் என்பது படைக்கப்பட்ட உபாதிகளைப் பொருத்து மாறுபடுகின்றது.

படைக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஒவ்வொரு அனுபவம் அடைகின்றது. ஓடும் நதிக்கு ஒரு நொடிக்குள் மூன்று காலமும் கடந்து விடுகின்றது.

இருக்கின்ற மரமோ தற்பொழுது நிகழ்காலத்தில் இருக்கின்றது.

மற்றொன்றோ இன்னும் படைக்கப்படவே இல்லை. எனவே, அது எதிர்காலத்தில் இருக்கின்றது. இருந்த ஒன்று தற்பொழுது இல்லாமல் கடந்த காலத்திற்கு சென்று விட்டது.

இவைகள் அனைத்துமாக படைக்கப்பட்ட மனம் இந்த காலச்சுற்றில் கடந்த காலம், நிகழ் காலம், இறந்த காலம் என மூன்று காலங்களை வகுத்துக்கொண்டு, அதில் சிக்கிக்கொண்டுள்ளது.

அதனால்தான், இந்த மனதைக் கொண்டு அந்த **'பற்றற்றான் பற்றினை (பரம்பொருளை) பற்றுக'** என்றாலும், நாம் அது ஏதோ ஏழு கடல், ஏழு மலைகள் என கடந்து சென்று, கண்டு பிடிக்கப்பட வேண்டிய ஒரு கடினமான பொருள் என்பது போன்று எங்கெங்கோ தேடி அலைகின்றோம். அதற்கான செயற்கரிய செயல்கள் பல செய்கின்றோம்.

உண்மையில் அது **"நான் இருக்கின்றேன்"** என்று நம் உள்ளத்தில்தான் '**உள்ளுணர்வாக**' இருப்பு கொண்டுள்ளது. இதை மட்டும் அறிய மறுக்கின்றோம்.

உண்மையில் அந்த '**உணர்வு வெளி**' மட்டும்தான் எப்பொழுதும் '**உள்ளது**', அது எந்த உள்ளீடும் இல்லாதது, அதன் சுயத் தன்மையில் பொருள் (Matter) எதுவும் இல்லை. அங்கு எதுவும் நடக்கவில்லை. அதனால் காலம் (Time) இல்லை. உண்மையில் '**இப்போது**' என்பது மட்டும்தான் அதற்கு இருக்கிறது. அதுவே, முக்காலத்தையும் கடந்து இருக்கின்றது.

அதில் இருந்து வெளியே **"நான்"** என்று தனியாக இந்த மனம் வெளிப்பட்டவுடன்தான் இறந்தகாலம் பற்றி 'நினைக்கிறது', எதிர்காலம் பற்றிக் 'கற்பனை' செய்கின்றது. ஆகவே, காலம் என்பது நினைவுகள் சார்ந்த மனதில்தான் குடி கொண்டு இருக்கின்றது.

இவ்வாறு காலமாக நிற்கும் மனம், உணர்வு வெளியில் காலமற்று மிதக்கிறது. இல்லாத காலம் இருப்பதாகத் தெரிவதுதான் காலத்தின் மாயை!.

இந்த **"நான் இருக்கின்றேன்"** என்ற உள்ளுணர்வு என்பதை, ஆ(பரமா)த்மாவின் சுய உணர்வு, பேருணர்வு, பேரறிவு என பலவாறாக அழைக்கலாம்.

அந்த உணர்வு வெளி எங்கும் நிறைந்துள்ளது போன்று, இந்த உடல் என்ற ஒவ்வொரு உபாதியிலும் இருக்கின்றது. அதனால்தான், இந்த உடலில் மிக சிறிய ஒரு எறும்பு ஊர்வதைக்கூட அந்த உடலின் உள்ளே குடி கொண்டுள்ள அந்த அறிவு உணர்கின்றது.

இதனை மனம் **"நான்"** என்று தன்னுடைய உணர்வாக பாவித்துக் கொள்கின்றது.

மனதுக்குள் ஓடும் எண்ணங்கள், அதன் விளைவாக உண்டாகும் உணர்ச்சிகள், கனவுகளாக ஓடும் கற்பனை பிம்பங்கள் என எதற்கும், இந்த உள்ளுணர்வுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

மனதின் வெளிப்பாடுகள் அனைத்தும், மனம் கற்பித்துக்கொண்ட கற்பனையே.

நம் ஒவ்வொருவருக்கும் தனித் தனியான ஒரு **'நான்'** இருக்கின்றது என்றும், உன்னுடைய 'நான்' வேறு, என்னுடைய 'நான்' வேறு என்றும் எண்ணிக் கொண்டிருப்பது போன்று, உண்மையில் நம்முடைய மனதிற்கும், உடலுக்கும் **'நான்'** என்னும் சுயப் பிரக்ஞை என்பது கிடையாது.

'நான் இன்னார்' என்று நாம் ஒவ்வொருவரும் நம்பிக் கொண்டிருப்பது அனைத்தும், நம்முடைய எண்ணங்களும், அதன் நினைவுகளும் புத்தியும், சேர்ந்து மனதில் சேகரித்துக் கொண்டிருக்கும் ஒரு கற்பனையான பதிவு. இது நாம் குழந்தையாக பிறந்து, இப்பொழுது வளர்ந்து இருக்கின்ற இந்தப் பருவம்வரை கற்பிக்கப்பட்டுள்ளது.

உண்மையின் இயல்பான பிரக்ஞை அல்லது உள்ளுணர்வு யாருக்கும் சொந்தமானது இல்லை. அது எல்லையும், வடிவமுமற்ற ஒரு உணர்வுவெளி.

அது அகண்டாகாரமானது. அதுமட்டுமே அனைத்தையும் உணர்கின்றது அதுவே ஆ(பரமா)த்மா. அதற்கு ஈடு இணை எதுவுமே இல்லை. அதற்கு வரையறுக்கப்பட்ட எல்லையே கிடையாது.

எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்துள்ள அந்த பேருணர்வு ஒன்று மட்டுமே, உபாதிகளாக உடலைக் கொண்ட, ஒவ்வொரு சீவனின் உள்ளேயும் பிரக்ஞையாக, உள்ளுணர்வாக பிரதிபலிக்கின்றது.

இதை, ஒவ்வொரு சீவனும் தன்னுடைய அறியாமையின் காரணமாக, அந்தப் பேருணர்வின் பிரதிபலிப்பைத் தன்னுடையதாக நினைத்துக்கொண்டு, தனியான ஒரு ‘**நான்**' இருப்பதாக மனதில் கற்பித்துக் கொண்டு, தன்னை உடலாகக் கருதி, தன்னிடம் இருந்து அந்த உள் உணர்வு, வெளிப்படுவதாக நம்புகின்றது.

ஒரு சீவனின் மரணத்தின்போது மனதின் அடுத்த பரிமாணமான புத்தி சக்தி செயலற்றுப் போய்விடுகிறது. அதனால், அதில் உணர்வு ரீதியான ‘**நான்**' என்பது பிரதிபலிப்பதில்லை. அதனால்தான், இறந்த ஜட உடலின் (சடலத்தின்) மீது ஈக்கள் மொய்த்தாலும் அதனால் உணர முடிவதில்லை.

இது நாள்வரை, அந்த உடலிலும், மனத்திலும் தனித்து இயங்கிய சுய உணர்வு மறுபடியும் அகண்ட உணர்வு மண்டலத்தில் போய் ஒன்றாய்க் கலந்து விடுகின்றது.

ஆகவே, நம் அனைவரின் ‘**உள்**’ இருந்து இயங்கும் அந்தர்யாமியான ‘**நான்**' ஒரே ‘**நான்தான்**’. வெட்டவெளி முழுவதிலும் அந்த ஒரே ஒரு ‘**நான்**'தான் இருந்துக் கொண்டு இயங்குகின்றது.

இந்த உண்மையை அறிந்து, இந்த தேகாத்ம புத்தியை (‘இந்த உடல் மட்டும்தான் நான்’ என்னும் கருத்தை) விடுத்து, தனக்குள் இருந்து இயங்கும் பிரக்ஞை என்ற பேருணர்வு என்பது, உண்மையில் அகண்டமான பிரபஞ்சப்பேருணர்வு என்று புரிந்து கொண்டால்தான் **‘இருப்பதெல்லாம் இறைவ(நா)னே’**

என்னும் கருத்தின் ஆழமான உட்பொருளை நாம் அனுபவப்பூர்வமாக உணர்ந்து கொள்ள முடியும்.



நம் ஒவ்வொருவரின் உள்ளே இருந்து இயங்கும் அந்த அகண்டாகாரமான '**நான்**'தான் உண்மையில் நம் ஒவ்வொருவரின் உடல் - மனம் வழியாகத் தன்னை அறிந்து கொள்கின்றது என்னும் உண்மை புரியும்போது, அந்த பக்குவப்பட்ட மனதின் தளத்திலிருந்து நம்மை நாமே பார்த்துக்கொள்ள முடியும்.

அதாவது, **"நான் இருக்கின்றேன்"** என்ற தன் இருப்பு, எப்பொழுதும் நம் உள்ளே உள் உணர்வில் உணர்த்திக் கொண்டே இருக்கின்றது. அதுவே எங்கும் நிறைந்த நாம் தேடிக்கொண்டிருக்கின்ற இறைவன் என்பதும், அதுவே, 'நான்' என்று தன் சொரூபத்தை உணர்வதும் சாத்தியமாகின்றது.

இதை நாம் அறியாமல், நம்முடைய மனதின் அடுத்த பரிமாணமான அஹங்காரத்தின் வாயிலாக

“நான்” என்று இந்த உடலையும், மனதையும் கருதிக் கொள்வதினால், அந்த ஆ(பரமா)த்மாவின் பேருணர்வை பெரும்பாலும் உணர்ந்துக் கொள்வதில்லை.

அது மனதிற்கும், உடலுக்கும் அப்பாற்பட்டது என்பதை, நாம் என்று உணர்கின்றோமோ, அப்பொழுதே நாம் இந்த உடலை அபிமானிப்பதை விடுத்து, அந்த உடலுக்குள் இருக்கும் ‘**உள் உணர்வை**’ அபிமானிக்கத் தொடங்கி விடுவோம்.

இது ஒன்றே நாம் அந்த பரம்பொருளிடம் இரண்டறக் கலக்கின்ற எளிய வழி. இது எப்பொழுதும் சாத்தியம். இதற்கு கால, தேசம் தேவையில்லை. இப்பொழுதும் அது இருக்கின்றது, இனியும் இருக்கும், இதற்கு முன்பும் அது இருந்தது.

இனி **“நான் இருக்கின்றேன்”** என்ற அந்த உள் உணர்வு ஒன்று மட்டுமே எப்பொழுதும் தன் இருப்பு கொண்டுள்ளது.

“அதுவேநான்”, “நானே அனைத்துமாக இருக்கின்றேன்”.

இந்த உண்மை தெளிவாகப் புரியும்போது, ‘**நான்**`, ‘**எனது**’ என்ற அபிமானம் அற்று போகும். உடல் பற்று விட்டு போகும். மரணம் என்பது ஏதுமில்லை என்று தெரியவரும். மரண பயம் என்பது முற்றிலும் அற்றுப் போய்விடும்.

உடலின் அழிவை நம்முடைய மரணம் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம் என்ற புரிதல் வரும். அதன்பிறகுதான் இந்த மாபெரும் பிரபஞ்சத்தை, வெட்டவெளியை, தன் உடலாகக் காண முடியும்.

இந்த அரிதான மனித உடலும், மனமும், கிடைத்ததின் அடிப்படைப் பயனே, இந்த ஜாலம் மிகுந்த மாயா அனுபவத்தின் வாயிலாக நாம் இந்தப் பிரபஞ்சம்தான் என்னும் உண்மையை உணர்ந்து கொள்வதற்குத்தான்.

இதுவரை நாம் அபிமானித்துக் கொண்டிருந்த மனம், உடல் என்ற இரண்டும் நானல்ல என்பதும், அனைத்திற்குள்ளும் அந்தர்யாமியாக இருக்கின்ற அந்த ஒன்றே இந்த நிகழ்வுகள் அனைத்திற்கும் காரணமாக இருப்பதையும் அறிய முடியும்.

ஆகவே, எங்கும் நிறைந்திருக்கும் பரமாத்மாவே **"நான்"** என்று அறிய வேண்டும். மேலும், 'நான்' கர்த்தாவும் அல்ல, போக்தாவும் அல்ல'. எப்பொழுதும் முக்தனாகவே இருக்கின்றவன்.

இந்த **"நான்"** என்பது அந்த பரப்பிரம்மத்திற்கு மட்டுமே உரித்தானது. அதை எடுத்து, அறியாமையினால், நாம் உடலின் மீதும், மனதின் மீதும் ஏற்றி வைத்துக் கொண்டு, அவைகளை **"நான்"**, **"நான்"** என்று அபிமானித்துக் கொள்கின்றோம்.

“நான்” என்ற இந்த அஹங்கார எண்ணம் இருக்கும் வரை, அது எதையாவது செய்து கொண்டிருக்கும். அல்லது செய்தவைகளின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கும். இதனால், பாவ, புண்ணியம் என்ற கர்ம பலன்களில் நாமாக வலிய சிக்கிக் கொள்கின்றோம்.

பொதுவாக, அஹம் (நான்) புற உலகுடன் தொடர்பு கொள்ளும் பொழுது அஹம்காரம் உண்டாகின்றது.

‘நான் அதைச் செய்தேன், இதைச் செய்தேன்’ என்று கூற வைத்து “கர்த்தா” என்ற உணர்வை உண்டாக்குகின்றது.

அதே **“நான்”** மனதின் வாயிலாக, நான் சந்தோஷமாக இருக்கிறேன், ருசிக்கிறேன், நான் வருந்துகிறேன் என்றெல்லாம் எண்ண வைத்து **‘போக்தா’** என்ற உணர்வை உண்டாக்குகின்றது.

‘நான் செய்கிறேன்’ என்ற **‘கர்த்ருத்வ’** மனப்பான்மையும், **‘நான் அனுபவிக்கின்றேன்’** என்ற **‘போக்த்ருத்வ’** மனப்பான்மையும் சேர்ந்து பொய்யான அஹங்காரத்தை தோற்றுவிக்கின்றது.

‘நான்’ என்ற அஹங்காரம் சும்மா இருப்பதில்லை. புறப் பிரபஞ்சத்தில் செயல்படும் பொழுது, அது நல்லவைகளையும் நாடுகின்றது, தீயவைகளையும் நாடுகின்றது.

‘**நான் செய்கின்றேன்**’ என்கின்ற எண்ணம் உள்ளவரை நல்லது - கெட்டதுகளில் ஈடுபடாமல் இருக்க இயலாது. அப்படி ஈடுபடும்பொழுது அதன் பலன்கள் இன்பம் உண்டாக்குவதாகவோ, அல்லது துன்பம் உண்டாக்குவதாகவோ இருக்கும். அவைகளின் தாக்கத்திலிருந்து தப்பிக்க இயலாது.

இந்த ‘**இரட்டை**’ களின் தாக்கம் நம் மனதை அலைக்கழிக்கத்தான் செய்யும்.

ஆனால் இந்த இரட்டைகள் மனதின் உற்பத்திகள்தானே தவிர, ஆத்மாவிற்கு - நிஜமான ‘**நானுக்கு**’ எந்த தொடர்பும் உடையதல்ல.

அந்த “**நான்**” வெறும் சாக்ஷி மாத்திரமாக இருக்கின்றது.

நன்மை - தீமை என்பது மனதின் பரிமாணத்தினால் உண்டான புத்தியின் உற்பத்தி.

இன்பம் - துன்பம் என்பது மனோ விருத்தியின் விளைவுகள் எனலாம்.

நாம் எதிர்க்கொள்ளும் இன்ப, துன்பங்களுக்கும் சுக, துக்கங்களுக்கும் அடிப்படைக் காரணம் ‘**உடல் - மனம்**’ என்ற சிக்கலை உணராதது தான்.

இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால், மனம் ஸ்தூல சரீரத்தை பயன்படுத்தி, அதனில் உண்டாக்கிக்கொண்ட புத்தி, சித்தம் மற்றும் ‘**நான்**’

என்ற எண்ணம் கொண்ட அஹங்காரம், இவைகள் அனைத்தும் சேர்ந்துதான் இதற்கெல்லாம் காரணம்.

இந்த எண்ணத்திற்கு மேலும் உரமூட்டுவது போன்று, மனோ, புத்தி, அஹங்காரத்தின் தூண்டுதலால் செய்யப்படும் செயல்களை எல்லாம் '**நான்**' செய்வதாக எண்ணும் கர்த்ருத்துவ மனப்பாங்கும், அந்த கர்மங்களினால் விளையும் வினைப்பயன்களை '**நான்**' அனுபவிப்பதாக நினைக்கும் போக்த்ருத்துவ மனப்பாங்கும்தான் காரணம் எனலாம்.

இந்த எண்ணங்கள் தான் '**இது சரி**' '**இது தவறு**' என்றும், '**இது இன்பம் கொடுப்பது, இது துன்பம் கொடுப்பது**' என்றும் எண்ணத் தூண்டுகின்றது.

இந்த எண்ணங்களெல்லாமே மனதின், புத்தியின், அஹங்காரத்தின் படைப்புக்களே.

உண்மையில் அந்த '**நான்**' நடப்பதில்லை, நினைப்பதில்லை, உண்பதில்லை, பேசுவதில்லை. ஏன்? மூச்சுக்கூட விடுவதில்லை. ஆகவே எந்த செயலும் அந்த '**நான்**' செய்வதில்லை.

ஆகவே, எந்த நிமிடம் இந்த உண்மையை ஒருவன் உணர்கின்றானோ, அப்பொழுதே அவன் முக்தனாகின்றான்'. முக்தன் என்றால் எப்பொழுதும் நிலையான ஆனந்தத்தை உடையவன் என்று பொருள்.

நம் உள்ளே இருந்துக்கொண்டு எப்பொழுதும் பிரகாசமாக ஒளிவீசி, நம் இந்திரியங்களையும், மனது, மற்றும் புத்தியையும் பிரகாசப்படுத்துவதற்கு உதவுவதும்

ஆன அந்த ஆ(பரமா)த்மா ஒன்று மட்டுமே **"நான் இருக்கின்றேன்"** என்று தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடியும்.

இந்த ஆ(பரமா)த்மா எல்லா உயிர்களின் உடல்களிலும் உள்ளே மறைவாக இருந்துக்கொண்டு, அவைகளின் உள்ளுணர்வாக அனைத்தையும் உணர்கின்றது.

அந்த உள்ளுணர்வு, மனதின் சாதாரண உணர்ச்சிகளைப் போன்று, எளிதாக வெளிப்பட்டுத் தெரிவதில்லை. ஆனால் ஒருமைப்படுத்தப்பட்ட நுண்ணிய புத்தியால் அந்த உள்ளுணர்வை மகா புருஷர்கள் உணர்கின்றனர்.

மனதின் இயல்பு எப்போதும் சஞ்சலப்படுவது.

புத்தியின் இயல்பு ஒன்றை நிச்சயமாக முடிவு செய்வது.

ஆகவே, மனதினால் ஆ(பரமா)த்மாவை உணர முடியாது. அதுவே, மனதின் அடுத்த பரிமாணமான புத்தியால் புற விஷயங்களை மட்டுமே முடிவு செய்ய இயலும். அக உண்மைகளைக் காணும் ஆற்றல் அதற்கும் இல்லை.

காரணம், இந்த புத்தி வெளிப்புற உலக விசயங்களினால் நிறைக்கப்பட்ட மனதின் ஒட்டு மொத்த தொகுப்பை கொண்டது.

இது எண்ணங்களைக் கொண்டு, சேகரித்துக் கொண்ட சித்தத்தின் வாயிலாக நேரிடையாகவோ, அனுமானமாகவோ உண்டான பயிற்றுவிக்கப்பட்ட புத்தி என்பதினால் இதனாலும் முடியாது.

ஆதலால், இது 'விழிப்புறாத நிலையில் உள்ள புத்தி' எனலாம். அது விழிப்படையும் போது மட்டுமே நுண்மை பெறுகின்றது. அத்தகைய '**நுண்ணிய புத்தியால் மட்டும்தான்**' **"உள்ளுணர்வை"** உணர முடியும்.

<u>புத்தி விழிப்புற என்ன செய்ய வேண்டும்?</u>

அந்தக்கரணங்களான மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற இவைகளில், மனமோ சஞ்சலம் உடையது, ஒரு நிலையில் நிற்காது. எதையாவது, எண்ணங்களை சிந்தித்தவாறு எப்பொழுதும் இருக்கும்.

அதற்கு அடுத்த நிலையில் உள்ள புத்தியோ, மனதின் சேகரிக்கப்பட்ட அனுபவங்களுக்கு ஏற்ப தன்னை பயிற்றுவித்துக் கொண்டுள்ளதால், இதுவரை தான் கற்றுக்கொண்ட விசயங்களே சரி என்று வாதிட்டு, அதனை தன் சித்தத்தில் சேகரித்து வைத்துக் கொண்டு, அதற்கு மேல் என்ன நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறினாலும், உள்வாங்க விரும்பாது எதையாவது தானாகவே முடிவு செய்யும்.

அத்துடன் நிற்காமல், இதுவரை அடைந்த அனுபவங்களின் அறிவை, '**அஹங்காரம்**' என்ற தன் முனைப்பாக, '**நான்**' என்று, ஏதாவது ஒருவகையில் வெளிப்படுத்தும்.

இந்த **"நான்"** என்ற அஹங்காரத்திற்கு காரணமான தன்முனைப்பை தகர்த்தெறிய வேண்டும் எனில், முதலில், **"பேச்சை மனதில் ஒடுக்க வேண்டும். மனதை விழிப்புற்ற புத்தியில் ஒடுக்க வேண்டும். விழிப்புற்ற புத்தியை ஆத்மாவில் (உள்ளுணர்வில்) ஒடுக்க வேண்டும்"**.

இதுவே, ஆ(பரமா)த்மாவை உணரும் வழி.

<u>பேச்சை மனதில் ஒடுக்க வேண்டும். - இது முதற்படி.</u>

தேவையற்ற பேச்சு உயர் வாழ்க்கைக்கு என்றல்ல, சாதாரண வாழ்கைக்கும் மிகப் பெரிய தடையாகும்.

நமது ஆற்றலில் முக்கியப் பகுதி பேச்சில் செலவழிகின்றது, என்பதே நாம் அறிந்துக்கொள்ளாத மிகப்பெரிய உண்மை. அதனைச் செலவிடாமல் சேமித்தால் மட்டுமே, உள்முகமாக உள்ளுணர்வை உணர விரும்பும் உத்தம புருஷர்களுக்கு, அந்த பரம்பொருளை பரமானந்தமாக அனுபவிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

பேச்சு இரண்டு வகை உள்ளது. - **'புறப் பேச்சு'**, மற்றொன்று **'அகப் பேச்சு'** எனலாம்.

அதாவது, வாய் வழியாகப் பேசுவது 'புறப்பேச்சு' என்றும், மனதில் உண்டாகும் எண்ணங்களின் கிளர்ச்சி 'அகப்பேச்சு' என்றும் அழைக்கப்படுகின்றது.

வாய் வழியாக பேசாமல் இருந்தாலும், மனதின் வழியாக எண்ணங்கள் ஆர்ப்பரித்து கொண்டு எழுகின்றது. இந்த இரண்டும் அடங்க வேண்டும்.

தேவையற்ற வாய்ப் பேச்சைப் பயிற்சியின் மூலமாக குறைக்கவோ, தவிர்க்கவோ முடியும்.

பேச்சை மனதில் ஒடுக்கும் பயிற்சி என்பது, தேவையற்ற பேச்சுக்களை குறைத்து, அவசியமான வார்த்தைகளை மட்டும் அளவாக பேசி, சில நாட்கள் மௌன விரதங்களை அனுசரித்து வருவது, மனத்திற்கு மிகப் பெரிய ஆற்றலையும், அமைதியையும் அள்ளித் தருவதை நாம் அனுபவமாக உணர முடியும். இதனால், மனம் செம்மையாகும்.

அதாவது, மனதின் திடம் கூடும்.

இங்கு, பேச்சு என்பது ஓர் உதாரணத்திற்காகக் கூறப்பட்டது.

இவ்வாறே, மற்ற அனைத்துப் புலன்களையும் (கண், காது, நாக்கு, மூக்கு) வசப்படுத்த வேண்டும்.

அதாவது புலன்களின் போக்கில் போகாமல், **‘சாக்ஷியாக’** நின்று வேடிக்கைப் பார்க்கப் பழக வேண்டும்.

மனம் என்ற ஒன்றை நாம் ஏற்கனவே சிறிது அறிந்திருப்பதால், இந்த முதற்படி எளிதாக விளங்கும்.

<u>மனதை விழிப்புற்ற புத்தியில் ஒடுக்க வேண்டும். - இது இரண்டாம்படி.</u>

ஆனால் விழிப்புற்ற புத்தியோ, ஆத்மாவோ நாம் இதுவரை அனுபவத்தில் அறிந்து கொள்ளாதவை.

இந்த சூழ்நிலையில், இந்த புத்தியை விழிப்புறச் செய்வதென்பது எப்படி எனில், தன்னுடைய புத்தியில் இதுவரை சேகரித்து வைத்துள்ள அனுபவங்கள் அனைத்தையும் சற்று கீழே இறக்கி வைத்துவிட்டு, திறந்த மனதுடன், திடமாக இதை செய்வது என தீர்மானித்து, தன் மனதை தானே விசாரித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு சாட்சியாக நின்று எண்ணங்கள் எழுந்து அடங்குவதைக் கவனிக்க வேண்டும். எழுகின்ற எண்ணங்களுடன் சேர்ந்து பயணிக்காமல், தனித்து நின்று அவற்றைக் காண்பதற்குப் பழக வேண்டும். இதுவே, மனதில் தேவையற்ற எண்ணங்கள் எழுவதை தவிர்க்கக்கூடிய ஒரே வழி.

மேற்கண்ட இந்த வழிமுறையில், தன் மனதில் இதுவரை சேர்ந்துள்ள தேவையற்ற அழுக்குகளை சுத்தமாக கழுவ முடியும். அவ்வாறு கழுவி சுத்தம் செய்யப்பட்டவுடன், உள்ளே உள்ள அந்தர்யாமி (பேரறிவு) விழிப்புற்ற புத்தி சக்தியாக பிரகாசமாக வெளிப்பட ஆரம்பிக்கும். அதுவே, ‘**உள்ளுணர்வு**’ என்ற ‘**சித்**’ (அறிவு) ஆகும். இது நாம் சேகரித்துக் கொண்ட ‘**அறிவு**’ அல்ல.

இங்கு விழிப்புற்ற புத்தி என்பது, மனதை விசாரித்து, ஆத்ம ஞானத்தில் ஈடுபட்டு, அதன் வாயிலாக தன்னை அறிதல் என்பதாகும்.

இந்த விசாரணையின் வாயிலாக, புத்தி விழிப்புறுவதை உணரும் போது மட்டும்தான், பேச்சை மனதில் ஒடுக்குவதும், மனத்தை விழிப்புற்ற புத்தியில் ஒடுக்குவதும், விழிப்புற்ற புத்தியை உள்ளுணர்வில் ஒடுக்குவதும் என நிகழும்.

<u>விழிப்புற்ற புத்தியை உள்ளுணர்வில் ஒடுக்க வேண்டும். - இது மூன்றாம்படி.</u>

அதாவது, அந்த உள்ளுணர்வாக உள்ளத்தில் ஒடுங்கியிருக்கின்ற **“நான்”** என்ற உண்மையான தன்னுணர்வை, அதாவது, நம்முடைய இயல்பான உள்ளுணர்வை உணர்ந்து கொள்வது என்பது, மனம் எப்பொழுதும், அந்த உள்ளுணர்வை கவனித்தவாறு இருப்பது ஆகும்.

அதாவது, மனம் வெளி விசயங்களில் அலைவதை நிறுத்தி, எப்பொழுதும் ஈஸ்வர

சிந்தனையில் இருப்பதற்காக, இறைவனை தேடி இங்கும், அங்கும் என வெளி இடங்களுக்கு, சென்று சகுணபிரம்ம (உருவ வழிபாடு) வழிபாட்டில் ஈடுபடுவதைக் காட்டிலும், மனதை உள்ளத்தின் உள்ளே திருப்பி, அந்தர்யாமியாக இருக்கின்ற பரமாத்மாவை நிர்குணபிரம்ம (அருவ வழிபாடு) வழிபாடாகக்கொண்டு கவனிக்கத் தொடங்கவேண்டும்.

அப்பொழுது, இந்த மனம் தன் தனித்துவத்தை இழந்து, உள்ளத்தின் உள்ளே அந்த உள்ளுணர்வாக **“நான் இருக்கின்றேன்”** என்ற ஆ(பரமா)த்மாவைப் பற்றிக் கொண்டு, அந்த ஒரே சிந்தனையில் மனம் எப்பொழுதும் ஈடுபட்டு, அதையே கவனித்துக் கொண்டிருப்பதினால் நாளடைவில் **“நான் அதுவாகவே இருக்கின்றேன்”** என்று தன் உண்மை சொரூபத்தை அறிந்து, அதனுடன் இரண்டறக் கலந்து ஒன்றகிவிடும்.

உலகப்பொருளை வெளியே தேடி அடைந்து, அவைகளை அனுபவிப்பது போன்று, அகண்டமான அந்த பரம்பொருளை வெளியே தேடி அலைந்து, அதை அடைந்து அனுபவிக்கலாம் என்ற மனதின் கற்பனையை உடைத்து, உள்ளே இருக்கின்ற ‘‘நானே அகண்டமாக எங்கும் வியாபித்து இருக்கின்றேன்’’ என்ற உண்மையை உணர்த்தும்.

இந்நிலையில், அங்கே சூரியன் ஒளிர்வதும், சந்திரன் ஒளிர்வதும், கோடானுகோடி நட்சத்திரங்கள், மின்னல், அக்னி என இந்த பிரபஞ்சம் அனைத்தும் என்னாலேயே ஒளிர்கின்றன. என்ற மிகப்பெரிய உண்மையை நாம் அனுபவமாக உணர முடியும்.

இது ஒன்றே இறைவ(தன்)னை அறிந்து கொள்ளும் அருமையான வழிமுறையாகும்.

எனவே, முதலில் பேச்சைக் கட்டுப்படுத்த ஆரம்பிக்க வேண்டியதே இதற்கு முதல்படி.

இதுவே, மிகவும் முக்கியம்.

பேச்சைக் குறைத்து அமைதியைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக மனமும் அமைதி நிலைக்கு திரும்பி, ஆ(பரமா)த்மாவை அறிய ஆவல் உண்டாகும்.

இவ்வாறு, ஆ(பரமா)த்மாவை அனுபவமாக அறிந்து கொண்டதாகவும், அவனைக் கண்டதாகவும் மகான்கள் பலரும் கூறியுள்ளனர்.

இது எந்த அளவிற்கு உண்மை?

அத்ம (இறை) அனுபவம் என்பது நம் உள்ளே உணரப்பட வேண்டிய ஓர் அனுபவமா? அல்லது புறப் பொருட்களைப் காண்பது போன்று கண்களுக்கு காட்சியாக காணப்படுகின்ற ஓர் அனுபவமா? என்பது பலருக்கும் மிகப்பெரிய சந்தேகமாக இருக்கின்றது.

ஆன்ம அனுபூதி என்பது ஒரு புறக்காட்சி அல்ல. அது நம்முடைய உண்மை ஸ்வரூபம், அதுவே நம் அன்றாட அனுபவம் ஆகும்.

உதாரணமாக, இருளில் அனைத்தையும் காண ஒரு விளக்கு அவசியம் தேவை.

அதுவே சூரியனைக் காண விளக்கு தேவையா?

தேவையில்லை.

ஏனெனில், சூரியனின் ஒளியால்தான் மற்ற அனைத்தும் ஒளிர்கின்றன. அதுபோல, நம்முள்ளே உள்ள ஆத்ம ஒளியால்தான் நாம் அனைத்தையும் காண்கின்றோம்.

எனவே ஆத்ம ஒளியைக் காட்ட மற்ற எந்த ஒளிகளினாலும் இயலாது.

ஆத்ம அனுபூதி, இறையனுபூதி என்பது ஓர் உள்ளுணர்வு அனுபவம். அது உணர வேண்டியது, அனுபவிக்கப்பட வேண்டியது மட்டுமே.

அன்பு, இரக்கம், இன்பம் போன்றவற்றை யாரும் காண முடியாது, அதனை உணர்ந்து, அனுபவிக்கவே முடியும்.

அதுபோல் ஆத்ம அனுபூதியையும் அனுபவிக்க முடியுமே தவிர, காண முடியாது.

அதுவே, நம் சுயம்பிரகாசம். மற்ற புறக் காட்சிகளைக் காண்பது போன்று, இந்த ஊனக் கண்களால் அதனைக் காண முடியாது.

ந து மாம் ஸக்யஸே த்ரஷ்டுமநேநைவ ஸ்வசக்ஷுஷா |
திவ்யம் ததாமி தே சக்ஷு: பஸ்ய மே யோகமைஸ்வரம் || (11 - 8)

இதையே ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம், உனது இந்த சாதாரண கண்ணினால் என்னைப் பார்க்க

இயலாது. எனவே உனக்கு தெய்வீகக் கண்ணைத் தருகிறேன் என்னுடைய ஈசுவர யோகத்தைப் பார். என்று கூறுகின்றார். (கீதை, 11.8)

இங்கு தெய்வீகக்கண் என்பது **“ஞானக்கண்”** என்று பொருள். அதாவது, விசாரத்தினால் அடைந்த **‘ஞானம்’ (விழிப்புற்ற புத்தி)** மட்டுமே நமக்கு ஆத்மாவைக் காட்டிக்கொடுக்கும்.

அதாவது, விசாரணையில், சாதாரணமாக இருந்த மனம், அறியாமை என்ற தளத்திலிருந்து, அடுத்த பரிமாணமான விழிப்புற்ற புத்தி என்ற தளத்திற்கு வந்து, இந்த உடல் இயங்குவதற்குக் காரணமான உண்மையான கர்த்தாவை கண்டுகொண்டு, **‘அதுவாகவே நான் இருக்கின்றேன்’** என்பதை தன் உள்ளுணர்வாக உணர்ந்து, தன் சுய சொரூபத்தில் இரண்டறக் கலந்து விடும்.

ஆத்மாவின் இத்தகைய அரிய இரகசியங்கள் சாஸ்திரங்களை அறியாத ஆரம்ப சாதகர்களுக்கு ஒன்றுமே புரியாது. அவர்கள் மேலும், மேலும் ஆன்மீகத்தின் உச்ச நிலையான தெளிந்த அறிவை விசாரித்து அடைந்தாக வேண்டும். அதாவது, சாஸ்திர விசாரணை செய்து ஞானத்தை அடைய வேண்டும்.

ஒரு சிலருக்கு மனதின் சம்ஸ்காரங்கள் மிகவும் அடர்த்தியாக இருப்பதினால், இதுபோன்ற அரிய உண்மைகளை அறிய முடியாது.

அப்படியே, அரைகுறையாக இந்த நூலைப் படிக்க நேர்ந்தாலும், இதில் கூறப்பட்டுள்ள விசயங்களை புரிந்து கொள்ளவும் முடியாது.

ஆகவே, அவன் அருளால் மட்டுமே அவனை அறிய முடியும். அவன் உணர்த்தினால் மட்டுமே உணர முடியும். அவன் காட்டுவித்தால் மட்டுமே இந்த நூலைக் காண முடியும். அவன் பயிற்றுவித்தால் மட்டுமே இதைப் படிக்க முடியும்.

இதுவரை, அறிய வேண்டிய அரிய உண்மையை ஒன்றென அறிந்துக் கொண்ட மனம், அறியாமையின் காரணமாக, ஆத்மாவின் மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் விசாரத்தின் வாயிலாக அறிந்து, நீக்கியவுடன், தன் உண்மை ஸ்வரூபத்தை உணர்ந்து, அமைதியாகி (திருப்தியாகி) விட்டது. அமைதி எங்கு உண்டாகின்றதோ, ஆனந்தம் அங்கே தன்னால் உண்டாகிவிடுகின்றது. ஆனந்தம் இருக்கும் இடத்தில், இறைவனை தவிர இருமைகள் இருக்காது.

இனி, **“இருப்பதெல்லாம் இறைவ(நா)னே!”.**

அதுவே நான்!, நானே அது!.

ஓம் தத் சத்!

தன்னை அறியும் மனம்

சுவாமி பிரபஞ்சநாதன்